

Poet Muthulingam on Ilayaraja

makkalkural tv



MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/21-23

(மலர் 48 ✱ சென்னை 3–8–2021 செவ்வாய் மாலை ✱ வெளியூர் 4–8–2021 புதன் ✱ இதழ் 330)

Regd. No. TN/CC(S)DN/122/21-23






பார்லிமெண்டை முடக்குவது ஜனநாயகம் இல்லை

# எதிர்க்கட்சிகள் மீது மோடி கடும் தாக்கு

புதுடெல்லி, ஆக.3–

**பார்லிமெண்டின் இரு அவைகளையும் நடத்த விடாமல் முடக்கி இருப்பது ஜனநாயகத்தையும் மக்களையும் அவமதிக்கும் செயல் என்று எதிர்க்கட்சிகள் மீது பிரதமர் மோடி காட்டமாகத் தாக்கினார்.**

பார்லிமெண்டின் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 19–ந் தேதி தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் சபை நடவடிக்கைகளை நடத்த விடாமல் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன. விவசாயிகள் பிரச்சனை, அரசியல் கட்சி தலைவர்கள், பத்திரிகையாளர்களின் டெலிபோன் ஒட்டுகேட்பு, விலைவாசி உயர்வு போன்றவற்றை எழுப்பி சபையை நடத்த விடாமல் செய்து வருகின்றனர். இதனால் ஒவ்வொரு நாளும் சபை முடங்கி வருகிறது. இந்த அமளிக்கு மத்தியிலும் முக்கிய மசோதாக்கள் மீது விவாதம் நடத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

இன்று எதிர்க்கட்சிகளை சமாளிப்பது குறித்த பாரதீய ஜனதா கட்சி எம்.பி.க்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா, கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி. நட்டா மற்றும் பலர் கலந்து கொண்டனர். பிரதமர் மோடி பேசும் போது தினமும் முழக்கங்களை எழுப்பி நாடாளுமன்றத்தை செயல்படவிடாமல் எதிர்க்கட்சிகள் தடுக்கின்றன எனகுற்றச்சாட்டினார். நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் அவமதிப்பதாக மோடி கூறினார்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் பார்லிமெண்ட் விவகாரத்துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி பேசுகையில்,

மருத்துவ படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கியதற்கு பாரதீய ஜனதா பார்லிமெண்டரி கட்சிக்குழு வரவேற்பு தெரிவித்து உள்ளது. திரிணமுல் எம்.பி., டெப்ரிக் ஓ பிரையன், மக்களால் தேர்வு செய்யப்பட்ட எம்.பி.,க்களை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்ததாக பிரதமர் கூறினார். பார்லிமெண்டில், காகிதங்களை கிழித்து எறிவதும் அதற்கு மன்னிப்பு கேட்காத எம்.பி.,க்களின் செயல்பாடு ஆணவம் மிக்கது எனவும் பிரதமர் பேசினார் என்றார்.



**வரிப்பணம் ரூ.133 கோடி நஷ்டம்**

**''ஜூலை 19–ந் தேதி பார்லிமெண்ட் துவங்கியது. 107 மணி நேரம் நடந்திருக்க வேண்டும். ஆனால் வெறும் 18 மணி நேரம் மட்டுமே நடந்திருக்கிறது. இதன் மூலம் மக்களின் வரிப்பணம் ரூ.133 கோடி நஷ்டம். பார்லிமெண்டும் முடக்கப்பட்டது''.**

### ஜி.எஸ்.டி. வசூல்

மத்திய அமைச்சர் வி. முரளிதரன் பேசுகையில் கூறியதாவது:–

ஜூலை மாதம் இந்தியாவிற்கு மகிழ்ச்சிகரமான செய்தியை கொண்டு வந்துள்ளது.

அந்த மாதத்தில் ஜிஎஸ்டி வசூல் ரூ.1 லட்சம் கோடியை தாண்டியது. டோக்கியோ ஒலிம்பிக்கில் சிந்து வெண்கலம் வென்றதும், ஹாக்கி அணி சாதனை படைத்ததும் ஜூலை மாதம் தான் என பிரதமர் கூறினார்.

மேலும், இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளின் செயல்பாடு , பார்லிமெண்ட்டை அவமதிப்பது போல் உள்ளது எனவும் தெரிவித்தார். அவையில் காகிதங்களை கிழித்து எறிந்த சம்பவத்திற்கு சம்பந்தப்பட்ட எம்.பி., வருந்தவில்லை. மசோதாக்களை நிறைவேற்றியது தொடர்பாக மூத்த எம்.பி., தெரிவித்த கருத்து, இழிவுபடுத்துவது போல் உள்ளது. மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற கிடைக்கும் எந்த வாய்ப்பையும் விட மாட்டோம் என பிரதமர் கூறியதாக முரளிதரன் கூறினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இன்று சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவுநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மகேசன் காசிராஜன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தீரன் சின்னமலை 216–வது நினைவு நாள்

# மக்களின் வரிப்பணத்தை மக்களுக்கே பயன்படுத்துவோம்: முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, ஆக.3–

**மக்களின் வரிப்பணத்தை மக்களுக்கே பயன்படுத்த வேண்டும் என்ற தீரன் சின்னமலை கனவை நனவாக்கிடும் உறுதியுடன் தி.மு.க. அரசு செயல்படும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.**

தீரன் சின்னமலை 216–வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தன்னலமற்ற பொதுச்சேவைக்கும், தனிச் சிறப்பான நாட்டுப்பற்றுக்கும் தகுதிமிக்க அடையாளமாகத் திகழும் தீரன் சின்னமலையின் 216–வது நினைவு நாள். அவரது தீரம் அளப்பரியது; பெருமைக்குரியது.

ஏழைகளுக்காக வரிப்பணத்தை வழிமறித்துக் கைப்பற்றிய போது, "சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை பறித்ததாகச் சொல்" என்று துணிச்சலாகச் சொன்னவர் அவர்.

இளைஞர்களின் எழுச்சி நாயகரான அவருடைய புகழ் பாடும் வகையில் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போதுதான், அவருக்கு சென்னை கிண்டியில் சிலை வைக்கப்பட்டது.

கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து – கொங்குப் பகுதி இளைஞர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் வாய்ப்புகள் உருவாக்கியதும் கருணாநிதி தான்.

### மக்களுக்கு உண்மையாக இருப்போம்

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்த நேரத்தில் தான், 31.7.2005 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக்குநினைவுஅஞ்சல்தலை வெளியிடப்பட்டது. ஆங்கிலேய அரசுக்குச் சிம்மசொப்பனமாய் விளங்கி, தூக்குக்கயிற்றை முத்தமிடும் நேரத்திலும் சிங்கமென வாழ்ந்த மாவீரன் தீரன் சின்னமலையின் நினைவு நாளில் அவரது வீரத்தையும் தீரத்தையும் நாட்டுப்பற்றையும் நாமும் பெறுவோம். அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உண்மையாக இருப்பதே தீரன் சின்னமலைக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

"மக்களின் வரிப்பணம் ஏழைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும்" என்ற தீரன் சின்னமலையின் கனவை நனவாக்கிடும் உறுதியுடன் தி.மு.க. அரசு தொடர்ந்து செயலாற்றும் என்ற உறுதிகூறி "வாழ்க அவரது புகழ்!" எனப் போற்றுகிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# இந்தியாவில் 30 ஆயிரமாக குறைந்த கொரோனா பாதிப்பு

புதுடெல்லி, ஆக. 3–

இந்தியாவில் தினசரி கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை 30 ஆயிரமாக குறைந்தது. இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 30,549 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுரை 3 கோடியே 17 லட்சத்து 26 ஆயிரத்து 507 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் ஒரே நாளில் 422 பேர் கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் இதுவரை உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 25 ஆயிரத்து 195 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 8 லட்சத்து 96 ஆயிரத்து 354 ஆக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் 38,887 பேர் குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 4 லட்சத்து 4,958 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். நாடு முழுவதும் நேற்று வரை பொதுமக்களுக்கு 47 கோடியே 85 லட்சத்து 44 ஆயிரத்து 114 கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் தற்போது 19 கோடியே 95 லட்சத்து 58,123 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 18 கோடியே 27,984 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 42 லட்சத்து 47 ஆயிரத்து 970 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு தற்போது 1 கோடியே 52 லட்சத்து 82 ஆயிரத்து 169 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 91,570 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பெட்ரோல் விலை உயர்வைக் கண்டித்து

# எதிர்க்கட்சி தலைவர்களுடன் சைக்கிள் பேரணியில் வந்தார் ராகுல் காந்தி

புதுடெல்லி, ஆக.3–

**பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ராகுல் தலைமையில் எதிர்க்கட்சி தலைவர்கள் சைக்கிளில் பேரணியாக பார்லிமெண்ட் நோக்கி சென்றனர்.**

பார்லிமெண்ட் மழைக்கால கூட்டத் தொடர் கடந்த மாதம் (ஜூலை) 19ந் தேதி துவங்கியது. இதில், பெகாசஸ் உளவு விவகாரம் (இஸ்ரேல் மென்பொருள் மூலம் அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் டெலிபோன் ஒட்டுக் கேட்பு) தொடர்பாக சபையில் விவாதிக்கக்கோரி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. 'இந்த விவகாரம் தொடர்பாக, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஏற்கனவே விளக்கம் அளித்துவிட்டார்' என, மத்திய அரசு தெரிவித்தது.

இதை ஏற்காத எதிர்க்கட்சியினர் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், சபை நடவடிக்கைகள் முற்றிலுமாக முடங்கி உள்ளன. இதுவரை 107 மணி நேரம் நடந்திருக்க வேண்டிய பார்லிமெண்ட் கூட்டம், மொத்தம் 18 மணி நேரம் மட்டுமே நடந்துள்ளது. இதன் வாயிலாக, 133 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

பெகாசஸ் உளவு விவகாரம் குறித்து விவாதிக்க அரசு மறுப்பதால், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும், எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு குறித்து விவாதிக்கவும் அனைத்து எதிர்க்கட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு ராகுல் அழைப்பு விடுத்துள்ளார். புதுடெல்லியில் உள்ள அரசியலமைப்பு மன்றத்தில், இன்று காலை 10 மணிக்கு இந்த கூட்டம் நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு இன்று காலை சிற்றுண்டி அளித்து, அவர்களுடன் ராகுல் காந்தி சிறப்பு ஆலோசனை நடத்தினார்.




இந்த கூட்டத்தில், திரிணமூல் காங்கிரஸ் சார்பில் கல்யாண் பானர்ஜி, மகுவா மொய்த்ரா, சிவசேனா சார்பில் சஞ்சய் ராவத், பிரியங்கா சதுர்வேதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் சார்பில் மனோஜ் ஜா, தி.மு.க. சார்பில் கனிமொழி எம்.பி., சமாஜ்வாதி சார்பில் ராம் கோபால் வர்மா, தேசியவாத காங்கிரஸ் சார்பில் சுப்ரியா சுலே மற்றும் மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட், புரட்சிகர சோஷயலிஸ்ட் கட்சி, கேரள காங்கிரஸ், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சிகளை சேர்ந்தவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆனால், புதுடெல்லியை ஆளும் ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங் பேசுகையில், 'நாங்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கிறோமா இல்லையா என்பது முக்கியம் இல்லை. பார்லிமெண்டில் விவாதம் வருகிறபோது, விவசாயிகளை ஆதரித்துப் பேசுவோம்' என்றார்.

கூட்டத்தில் ராகுல் பேசுகையில், ''நாம் இங்கு ஒன்றாக அமர்ந்தது முக்கியமான விஷயம். மக்களின் குரல் ஒன்று சேர்ந்தால், நமது குரல் வலிமை பெறுவதுடன், பா.ஜ., ஆர்எஸ்எஸ்.,க்கு நெருக்கடி ஏற்படுத்தும். அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்த சைக்கிள் பேரணி'' என்றார்.

மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில், "பெகாசஸ் விவகாரம், விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட எந்த விவகாரத்தையும் மத்திய அரசு காதுகொடுத்துக் கேட்பதில்லை. மத்திய அரசில் உள்ள ஒருவரும் இதைக் கவனிப்பதில்லை. ஆதலால், எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர முடிவு செய்துள்ளோம், நாம் அனைவரும் ஒன்று திரள்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து ராகுல் தலைமையில் எதிர்க்கட்சி தலைவர்கள் சைக்கிளில் பேரணியாக சென்றனர்.

விவசாய சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லியில் போராட்டம் நடத்தி வருபவர்களுடன் டிராக்டரில் ராகுல் பேரணியாக பார்லிமெண்ட்டை நோக்கி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிபிஎஸ்இ 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியீடு: 99.4% பேர் தேர்ச்சி

புதுடெல்லி, ஜூலை 3–

**சிபிஎஸ்இ 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இதில் 99.4 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றனர்.**

நாடு முழுவதும் கொரோனா 2வது அலை காரணமாக சிபிஎஸ்இ 10, 12ம் வகுப்புப் பொதுத்தேர்வுகள் ரத்து செய்யப்பட்டு, மாணவர்கள் அனைவருக்கும் உள்மதிப்பீடு அடிப்படையில் மாணவர்களின் தேர்ச்சி குறித்து முடிவு செய்து அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி பிளஸ் 2 மாணவர்களுக்குக் கடந்த 30ந்தேதி தேர்வு முடிவுகள் வெளியாகின. அதில் மொத்தம் 99.37% பேர் தேர்ச்சி பெற்றனர்.

இந்நிலையில் சிபிஎஸ்இ 10–ம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்று நண்பகல் 12 மணிக்கு வெளியாகும் என சிபிஎஸ்இ தேர்வு கட்டுப்பாட்டு நிர்வாகம் அறிவித்தது. தேர்வு முடிவுகளை cbseresults.nic.in, cbse.gov.in என்ற இணையதளத்திலும், அல்லது Digilocker, Umang செயலி மற்றும் எஸ்எம்எஸ் மூலமும் தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. இதன்படி தேர்வு முடிவுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.



பதிவு எண், பள்ளியின் பெயர், பிறந்த தேதி, மாணவர் பெயர் ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

10–ம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 99.4 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2020) இது 91.34 சதவீதமாக இருந்தது.

# தமிழகத்தை பிரிக்கும் திட்டமில்லை: மத்திய அமைச்சர் விளக்கம்

புதுடெல்லி, ஆக. 3–

**தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை என்று மத்திய இணை அமைச்சர் நித்யானந்த ராய் விளக்கம் அளித்துள்ளார்.**

மத்திய இணையமைச்சர் எல். முருகனின் சுய விவரக் குறிப்பில் கொங்குநாடு என்ற வார்த்தை இடம்பெற்றிருந்த நிலையில், அது தொடர்பாக சர்ச்சை எழுந்தது.

இதையடுத்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களவை எம்பிக்கள் பாரிவேந்தர் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் இது தொடர்பாக எழுத்துப்பூர்வமாக எழுப்பிய கேள்விக்கு, உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த ராய் இன்று விளக்கம் அளித்துள்ளார்.

அதில் தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தார்.

இதன் மூலம் கொங்குநாடு விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# மாற்றங்களே பாரதீய ஜனதாவின் வெற்றி மந்திரம்




மாற்றம் தான் நிரந்தரம் என்பதை உணர்ந்த தேசிய கட்சியே வலுவான கட்சியாக இருக்க முடியும்! அந்த வகையில் பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள் மாற்றங்களை ஏற்படுத்துவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

தற்போது கர்நாடகாவில் 75 வயதை எட்டி விட்டதால் அரசியல் ரீதியாக வலுவான நிலையில் இருந்த எடியூரப்பா பாரதீய ஜனதா கட்சியின் சட்டத் திட்டத்தின்படி பதவியில் தொடர முடியாமல் முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

அதைத் தொடர்ந்து அவரது விசுவாசியாக கருதப்படும் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் பொம்மையின் மகன் பசுவராஜ் பொம்மை புதிய முதல்வராக பதவி ஏற்றுள்ளார்.

பொம்மை கர்நாடக முதல்வராக இருந்த போது மாநில அரசுகளைக் கலைக்க மத்திய அரசு பயன்படுத்தி வந்த 356 வது பிரிவு சரத்துகளுக்கு கடிவாளம் போட்டவர் ஆவார்.

ஆட்சி கலைப்பு அதிர்வுகள் தோன்றும் மாநிலங்களில் எஸ்ஆர் பொம்மையின் வழக்கு தான் நினைவு கூறப்பட்டு மீண்டும் நிலைமை சீராகிட வைத்து விடும்!

அவரது மகன் பசுவராஜ் பொம்மையும் கர்நாடக அரசியலில் நன்கு அறியப்பட்டவர் தான்.

2019ல் 4 வது முறையாக எடியூரப்பா முதல்வராக பதவியேற்ற போது அவர் 2 ஆண்டுகளுக்கு மட்டுமே 'காண்ட்ராக்ட் முதல்வர்' என்ற அறிவிப்போடு தான் பதவி ஏற்றார்.

2 ஆண்டுகளில் தனது அரசியல் நிலையை நிரந்தரமாக்கிக் கொள்ள பலர் நகர்தல்களை செய்தவர் தான் என்பதால் அங்கு அரசியல் ரீதியாக பெரிய மாற்றம் வந்து விட வாய்ப்பு இல்லை என்றாலும் மாற்றம் வெளிச்சத்திற்கு வரத்தான் செய்யும்.

வெளியேறிய எடியூரப்பாவின் வயது 75, புதிதாக பதவியேற்றுள்ள பசவராஜ் பொம்மையின் வயதோ 61 தான்!

இப்படி இளம் தலைவர்களை முன்நிறுத்தி மாநில வளர்ச்சிகளுக்கு பணியாற்ற வைத்து வரும் முன்னணி கட்சி பாரதீய ஜனதாவாகத்தான் இருக்கக் கூடும்!

உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அதற்கு நல்ல முன் உதாரணமாகும்.

பல்வேறு மாநிலங்களில் இருக்கும் பாரதீய ஜனதா கட்சியின் முதல்வர்கள் சிவராஜ் சிங் சவுகான், வசுந்தரா ராஜீ, ராமன்சிங் தற்போது ராஜினாமா செய்து விட்ட எடியூரப்பா ஆகிய அனைவருமே வாஜ்பாய் பிரதமராக இருந்த காலக்கட்டத்தில் மாநில பாரதீய ஜனதாவின் தலைவர்களாகவோ முக்கிய பிரமுகராக பணியாற்றியவர்கள் ஆவர்.

ஆனால் பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் பாரதீய ஜனதாவின் அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்குவதில் மிகக் கவனமாகவே இருக்கிறார்கள். கர்நாடகாவில் மாற்றத்தை தொடர்ந்து விரைவில் மத்திய பிரதேசத்தில் சிவராஜ் சிங் சவுகான் வெளியேற்றப்பட்டு புதிய தலைவரை நியமிக்க இருக்கிறார்கள்.

நரோத்தம், ஷர்மா, பிரகலாத் பட்டேல் என பல பெயர்கள் அடிபடுகிறது.

ஆக அந்த மாநிலத்திலும் புதிய தலைவர் உருவாவக பயிரிடப்பட்டு வருகிறது. வாஜ்பாய், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி கால அரசியல் தலைவர்களுக்கு இனி இடமில்லை என்பதை விட அவர்கள் புதிய அடுத்த தலைமுறை தலைவர்கள் வளர வழி விட்டு பின்னணியில் செயல்பட தயாராகி விட்டனர்.

பிரதமர் சமீபத்தில் ஏற்படுத்திய மந்திரி சபை மாற்றமும் புதிய தலைவர்கள் உருவாக வழி கண்டது.

வாஜ்பாய் பிரதமராக இருந்த மந்திரி சபையில் அத்வானிக்கு இருந்த அதிகாரம் பிரதமர் மோடி மந்திரி சபையில் ராஜ்நாத்துக்குத் தான் என்று சொல்லி விட முடியாது! அமித்ஷாவுக்குத் தான் என்பது அரசியல் நிதர்சனமாக இருக்கிறது.

வாஜ்பாய் அமைச்சரவையில் இருந்த ராஜ்நாத்தும் அப்பாஸ் நக்குலியும் மட்டுமே தற்போது அமைச்சரவையில் இருக்கிறார்கள்.

மேலும் அத்வானி கட்சியின் தலைவராக இருந்த காலத்தில் பொறுப்புகள் பெற்று இருந்த ஒரு சிலரையும் மத்திய அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டனர்.

பிரதமர் மோடியின் பல அதிரடி திட்டங்கள் அரசியல் மாற்றங்கள் உருவாக்கி விட்டதை கண்டோம்.

பிரான்சுடன் ரபேல் போர் விமான ஒப்பந்தம் நடுவானில் பறந்து கொண்டிருக்கும் போதே பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்திக்க முடிவெடுத்து பாகிஸ்தான் மண்ணில் தரை இறங்கியது, ஜனாதிபதியாக கோவிந்தை நியமித்தது போன்ற பல்வேறு முடிவுகளை அதிரடியாக அறிவித்து வந்த போதெல்லாம் அக்கட்சியில் எந்த எதிர்ப்புக் குரலோ, விவாதிக்காமல் செய்யாதே என்ற வாக்குவாதமோ எழுந்ததே இல்லை.

இப்பவே மாற்றங்கள் செய்து கொண்டிருக்கையில் சிந்தனைகளிலும் செயல்பாடுகளிலும் மாற்றம் வரும் என்பதால் பிரதமர் மோடியின் திட்டங்களில் இருந்த புதுமையை எவராலும் எதிர்க்க முடியாமல் அக்கட்சி கட்டுப்பாட்டுடன் இருக்கிறது.

இது இரும்பு கர அதிகார பலமாக தெரியலாம், நல்ல முடிவுகளை முழு நம்பிக்கையுடன் செயல்படுத்த அப்படி ஒரு மாற்றமும் , உயர் மட்ட தலைவர்களின் மனநிலையும் கட்சியின் சிந்தனையும் ஒத்திருக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது.

2016 ல் பிரதமர் மோடி கொண்டு வந்த பணமதிப்பு விவகாரத்தில் அதிருப்தி நாடெங்கும் தென்பட்டாலும் சொந்த கட்சியினர் கட்டுப்பாட்டுடன் அதை ஏற்றுக் கொண்டனர்.

இதையெல்லாம் பார்க்கும்போது 2024 ல் பாராளுமன்றத் தேர்தல் மீண்டும் சந்திக்க இன்றே பாரதீய ஜனதா தயாராகி விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

எதிர் தரப்பில் தேசிய காங்கிரஸ் கட்சியிலும் இளம் தலைவர்கள் இருக்கிறார்கள் என்றாலும் மாநில தலைமையும், தேசிய தலைவர்களும் நிரந்தரமானவர்களாகவே இருப்பது தான் உண்மை. அதுதான் அக்கட்சியின் இன்றைய பலவீனம்!

2024ல் ஆட்சியை ஒருவேளை காங்கிரஸ் பிடித்து விட்டால் யார் பிரதமர், யார் முக்கிய மந்திரிகள் என்ற கேள்விகளுக்கு பதிலை எளிதில் சொல்லிவிட முடியும். அதில் ஏதேனும் மாற்றம் வந்தால் உட்கட்சி தலைமை பூசல் வெடித்து கட்சியே சிதறி விடும் என்ற நிலை உருவாகிட, மாற்றத்தை நிறுத்தி விட வேண்டிய நிர்பந்தம் தான் எழும். அதை தான் கடந்த சில ஆண்டுகளாக தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைமை பார்த்துக் கொண்டிருக்கிறது.

எல்லா மாற்றமும் நல்லதாக தான் இருக்கும் என்று கூறிவிட முடியாது. ஆனால் காலச் சக்கர சுழற்சியில் புதியவர் வருகைக்கு வழியின்றி போய் விடக்கூடாது.



சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு, அண்ணா தி.மு.க. சார்பில், கழக ஒருங்கிணைப்பாளர், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள தீரன் சின்னமலை திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் சி.பொன்னையன், எஸ்.பி. வேலுமணி எம்.எல்.ஏ., டி.ஜெயகுமார், ஜெ.சி.டி. பிரபாகர், ஆர். கமலக்கண்ணன், வி.என்.பி. வெங்கட்ராமன், மாவட்டச் செயலாளர்கள் விருகை வி.என். ரவி, பா.பெஞ்ஜமின், நா. பாலகங்கா, ஆதிராஜாராம், கே.பி. கந்தன், டி.ஜி. வெங்கடேஷ் பாபு, தி.நகர் பி.சத்யா, எம்.கே. அசோக், ஆர்.எஸ்.ராஜேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற பி.வி.சிந்துவுக்கு ரூ.30 லட்சம் பரிசு

## ஆந்திர முதல்வர் அறிவிப்பு

ஐதராபாத், ஆக. 3–

ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் வென்ற பி.வி.சிந்துவுக்கு, 30 லட்சம் ரூபாய் பரிசு தொகையை ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் அறிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்துவரும் ஒலிம்பிக் போட்டிகளில், இந்திய வீராங்கனைகள் அதிரடியாக ஆடி, இந்தியாவுக்கு பதக்கங்களை பெற்று தந்து வருகின்றனர். முதல் முதலாக 49 கிலோ பளுதூக்குதல் பிரிவில், இந்தியாவை சேர்ந்த மீராபாய் சானு வெள்ளிப் பதக்கத்தை வென்றார். தனது வெற்றியை இந்திய மக்களுக்கு சமர்ப்பிப்பதாக அவர் உணர்ச்சிவசமாக தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, பேட்மிண்டன் போட்டியில் சீன வீராங்கனையை 21 – 13, 21 – 15 என்ற கணக்கில் வீழ்த்தி, வெண்கலப் பதக்கத்தை பி.வி சிந்து கைப்பற்றினார். ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையும் பிவி சிந்துவையே சேரும். கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கங்களை வென்ற தெலுங்கானாவை சேர்ந்த பி.வி சிந்துவுக்கு நாடெங்கிலும் இருந்து பாராட்டுகள் குவிகின்றன. இந்த நிலையில், டோக்கியோ ஒலிம்பிக்ஸ் பேட்மிண்டன் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி சிந்துவிற்கு, 30 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் அறிவித்துள்ளார்.

# ஆண்கள் ஹாக்கி அரையிறுதி: இந்தியா அதிர்ச்சி தோல்வி

## ‘வெற்றியும், தோல்வியும் வாழ்க்கையின் ஒரு பகுதி’: பிரதமர் மோடி ஊக்கம்

டோக்கியோ, ஆக. 3–

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள் ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி 2–5 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணியிடம் தோல்வி அடைந்தது.

டோக்கியோ ஒலிம்பிக் ஆண்கள் ஹாக்கி அரையிறுதிப் போட்டியில் இந்திய – பெல்ஜியம் அணிகள் மோதின. ஆட்டம் தொடங்கிய 2வது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் லூபார்ட் கோல் அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். அதற்கு பதிலடியாக 7வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னரில் ஹர்மன்ப்ரீத் சிங் கோல் அடித்து சமன் செய்தார். இரு அணிகளும் சமநிலையில் இருத்ததால் ஆட்டம் பரபரப்பாக நகர்ந்தது. இந்திய வீரர் மன்தீப் சிங் 2வது கோல் அடிக்க இந்திய அணி 2–1 என்று முன்னிலை பெற்றது.

முதல்கால்பகுதி நேர முடிவில் இந்திய அணி 2–1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

2வது கால்பகுதி நேரம்தொடங்கிய சிறிதுநேரத்தில் 19வது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் ஹென்ட்ரிக்ஸ் கோல் அடித்து 2– 2 என்ற கணக்கில் சமன் செய்தார். அதன்பின் இந்திய அணியினரும், பெல்ஜியம் வீரர்களும் கோல் அடிக்க முயன்றும் முடியவில்லை. இதையடுத்து, 2வது கால்பகுதியில் இரு அணியினரும் 2–2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தனர்.

3வது கால்பகுதி நேரத்திலும் இரு அணியினரும் கோல் அடிக்க,



மாறி, மாறி முயன்றனர். ஆனால், பெல்ஜியம் அணியினரின் முயற்சியை இந்திய வீரர்கள் தடுத்தனர், அதேபோல இந்திய வீரர்களின் முயற்சியை பெல்ஜியம் வீரர்கள் தடுத்தனர். இதனால் 3வது கால்பகுதி நேரத்திலும் எந்த கோலும் இரு அணி வீரர்களும் அடிக்கவில்லை.

4வது கால்பகுதி நேரத்தில் பெல்ஜியம் வீரர்கள் அதிரடியாக கோல் மழை பொழிந்தனர். 49 வது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் அலெக்சான்டர் ஹென்ட்ரிக்ஸ் தனது 2வது கோலையும், அணிக்கு 3வது கோலையும் அடித்தார்.

53வது நிமிடத்தில் பெல்ஜியம் அணிக்கு கிடைத்த பெனால்டி கார்னரை அந்த அணி வீரர் அலெக்சான்டர் ஹெட்ரிக்ஸ் கோலாக்கி அடித்தார். 59வது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் ஜான்ஜான் டோமென் கோல் அடிக்க பெல்ஜியம் அணி 5–2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்ட நேர முடிவில் இந்திய அணியை 2–5 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பெல்ஜியம் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

41 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஆடவர் ஹாக்கி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றும், அரையிறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவியதன் மூலம் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்லும் கனவு நிறைவேறாமலேயே போனது. எனினும், ஆடவர் ஹாக்கி போட்டியில் வெண்கலப் பதக்கம் வெல்லும் வாய்ப்பு உள்ளது.

ஆடவர் ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் தோல்வி அடைந்ததால், இந்திய ஆடவர் ஹாக்கி அணி, வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் மோதவுள்ளது. இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆஸ்திரேலியா – ஜெர்மனி ஆண்கள் ஹாக்கி அணிகளுக்கு இடையேயான அரையிறுதி ஆட்டத்தில் தோல்வியடையும் அணியுடன், இந்திய ஆடவர் ஹாக்கி அணி, மூன்றாவது இடத்துக்கான போட்டியில் விளையாட உள்ளது.

### பிரதமர் மோடி ஊக்கம்

வெற்றியும், தோல்வியும் வாழ்க்கையின் ஒரு பகுதி என்று ஒலிம்பிக் ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் பெல்ஜியம் அணியிடம் தோல்வி அடைந்த இந்திய ஹாக்கி அணி வீரர்களை பிரதமர் மோடி ஊக்கப்படுத்தியுள்ளார்.

டோக்கியோ ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கிப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இந்திய பெல்ஜியம் அணிகள் மோதும் போட்டியை, நாட்டு மக்களைப் போலவே, பிரதமர் நரேந்திர மோடியும் தொலைக்காட்சி வாயிலாக நேரலையாகப் பார்த்தார். இந்த போட்டியில் இந்திய அணி 2–5 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணியிடம் தோல்வி அடைந்தது. 41 ஆண்டுகளாக ஒலிம்பிக்கில் பதக்கம் இல்லாமல் சென்றுவரும் இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி தங்கம் அல்லது வெள்ளியை கைப்பற்றும் என எதிர்பாரக்கப்பட்ட நிலையில் ஏமாற்றமே கிடைத்துள்ளது.

இந்திய அணி தோல்வி அடைந்த நிலையில் வீரர்களை உற்சாகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் பிரதமர் மோடி ட்விட்டரில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் பதிவிட்ட கருத்தில் “வெற்றிகளும், தோல்விகளும் வாழ்க்கையின் ஒரு பகுதி. நமது ஆண்கள் ஹாக்கி அணி டோக்கியோ ஒலிம்பிக்கில் சிறப்பான பங்களிப்பு செய்துள்ளார்கள். அடுத்தப் போட்டியில் இந்திய அணி சிறப்பாகச் செயல்படவும், எதிர்காலம் சிறப்படையவும் வாழ்த்துகள். நமது வீரர்களை நினைத்து இந்தியா பெருமை கொள்கிறது” எனத் தெரிவித்துள்ளார்.

# கதுவாவில் விபத்தில் சிக்கிய இந்திய ராணுவ ஹெலிகாப்டர்

ஸ்ரீநகர், ஆக.3–

ஜம்முவின் கதுவாவில் உள்ள ரஞ்சித் சாகர் அணை அருகே இன்று காலையில் இந்திய ராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது.

ஜம்முவில் உள்ள கதுவாவில் உள்ள ரஞ்சித் சாகர் அணை அருகே, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது. பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு என்டிஆர்எப் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக வெளியான ராணுவ ஆதாரங்களின்படி, ரஞ்சித் சாகர் அணையில் விபத்துக்குள்ளான ராணுவ விமானப் போக்குவரத்து ஏஎல்எச் துருவ் ஹெலிகாப்டரின் விமானிகள் இருவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுத அமைப்பு ஒருங்கிணைந்த இந்த ஹெலிகாப்டர், பதான்கோட் (பஞ்சாப்) பகுதியிலிருந்து புறப்பட்டு சென்ற ஒரு வழக்கமான பயணத்தின் போது இந்த விபத்து நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்குடி – திருவாரூர் இடையே முன்பதிவில்லா சிறப்பு ரெயில்

சென்னை, ஆக. 3–

காரைக்குடி திருவாரூர் ரெயில் நிலையங்களுக்கு இடையே, நாளை முதல் முன்பதிவில்லா சிறப்பு ரெயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கொரோனா காரணமாக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், பின்பு முன்பதிவு செய்து பயணிக்கும் சிறப்பு ரயில்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், திருவாரூர் காரைக்குடி சிறப்பு ரெயில் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் திருவாரூரிலிருந்து காலை 08.15 மணிக்கு புறப்பட்டு மதியம் 02.15 மணிக்கு காரைக்குடி சென்று சேரும். மறுமார்க்கத்தில் காரைக்குடி திருவாரூர் சிறப்பு ரயில் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் காரைக்குடியிலிருந்து மதியம் 02.30 மணிக்கு புறப்பட்டு இரவு 08.30 மணிக்கு திருவாரூர் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஊர் : பாமணி

மாவட்டம்: திருவாரூர்

**ஸ்தல எண்: 167, கோயில் : அருள்மிகு பாமணி நாகநாதர் திருக்கோயில்**

நலன்களெல்லாம் நல்கும் நாகநாதர் கோயில்! தெய்வப்
பலன்களெல்லாம் தரும் பாமணி சிவன் கோயில்!!
ஆயிரம் தலை ஆதிசேஷன் வழிபட்ட கோயில்! அது
அருள்மிகு பாமணி நாகநாதர் திருக்கோயில்!!

காவிரித் தென்கரையில் உள்ள தலம்! இது
தேவாரப் பாடல் பெற்ற ஒரு தலம்!!
சுயம்புவாய் இறைவன் விளங்கும் கோயில்! இது
பாம்பணியாம் பாமணி சிவன் கோயில்!!

நாகநாதர் சர்ப்பபுரீஸ்வரர் மூலவராம் இங்கு
அமிர்தநாயகி அன்னை அம்பிகையாம்!!
பிரம்ம ருத்ர பசு நாகத்தேனுதீர்த்தம்! இது
மாமரம் தலவிருட்சமாய் கொண்ட கோயில்!!

காரண ஆகமம் இங்கு பூஜை வைபவம்! இது
ராகு கேது சர்ப்ப தோஷம் நீக்கும் தலம்!
சிம்ம தட்சிணாமூர்த்தியின் சிறப்பு தரிசனம்! இந்த
நாகநாதரை வழிபடக் கிடைக்கும் புண்ணியம்!!

பரிவார தெய்வங்கள் உள்ள தலம்! இது
பழமையுடன் பெருமை கொண்ட தலம்!!
சகலதோஷங்களுக்கும் பரிகாரத் தலம்! சிவனை
ஆதிசேஷன் புற்று வடிவில் அமைத்த தலம்!!

கவிஞர் எஸ்.ராமகிருஷ்ணன்
சிறுமுகை

**சிறுகதை**

# அப்பா!

வேலூர்.வெ.இராம்குமார்

"அப்பா!பெரியப்பா உங்களை பார்க்க வந்திருக்காரு. வீட்டு ஹால் ல உட்கார வெச்சிருக்கேன் என்றான் கண்ணன்.."

"அதைக் கேட்டதும் உதயகுமாருக்கு அதிர்ச்சியாப இருந்தது..டேய்!நீ தெரிஞ்சுதான் செஞ்சீயா..அவரை பற்றி தெரிஞ்சும் எப்படிடா உள்ளே விட்டே?

"நொடிஞ்சு போய் வந்திருக்காருப்பா..பிளீஸ் கீழே வாங்க!

"உடனே மாடியிலிருந்து இறங்கியவர்,தன் அண்ணனை பார்த்ததும் அதிர்ச்சியில் நின்றார்.."

"டேய் தம்பீ!என்னை மன்னிச்சிடுடா..என் ஒரே பையன் என்னைவிட்டுட்டு போய்ட்டான்.. நம்ம குடும்ப சொத்துக்காக ஆசைப்பட்டு,குடிகாரனான உனக்கு நான் குடியை வாங்கி கொடுத்தே உன் சொத்தையும் என் பேர்ல எழுதி வாங்கினதற்குகடவுள்எனக்குசரியான தண்டனை கொடுத்து,என் மகனை சாகடிச்சுட்டாரு.இதுக்கப்புறமா இந்த சொத்துக்களை வெச்சு நான் என்ன பண்ணப் போறேன்..உனக்கு நான் செஞ்ச பாவத்துக்கு அபகரிச்ச உன் சொத்தையும் என் சொத்துகளையும் உன் ஒரே.வாரிசு கண்ணன் பேர்லேயே எழுதிட்டேன்.."

"என்ன பெரியப்பா இதெல்லாம்.. நானும்,அப்பாவும் பணம்,சொத்துக்கு அலையறவங்கன்னு நினைச்சீங்களா?

"இல்லேப்பா..உப்பு தின்னவன் தண்ணி குடிச்சே ஆகணும்.. வாரிசேயில்லாத எனக்கு இனி நீதான் வாரிசு.இந்த சொத்தை உனக்கு கொடுக்கறதுல எனக்கு வருத்தமேயில்லை..நான் செஞ்ச நம்பிக்கை துரோகத்தை உங்கப்பன் மறக்கவும் மன்னிக்கவும்மாட்டான். அதனால,இந்த சொத்து பத்திரங்களை கொடுக்க வந்தேன்.நானும்,என் மனைவியும் இனி நிம்மதியா காசியாத்திரை கிளம்புவோம் என கூறிவிட்டு,உதயகுமாரை பார்த்து என்னை மன்னிச்சுடுடா..என கூறிவிட்டு கிளம்பினார்.."

"கடவுள் இருக்காருப்பா.. உங்களை ஏமாத்தின நம்மளை அந்த கடவுளே தண்டிச்சுட்டாரு.நம்ம பங்கு மட்டுமல்,பெரியப்பாவோட பங்கையும் கொடுத்திட்டாரு.. இந்தாங்க பத்திரம் என கூறியபடியே சொத்து பத்திரத்தை தந்தையிடம் திணித்தான் கண்ணன்.."

"உதயகுமாருக்கு ஏனோ,இப்போது தன்னை ஏமாற்றிய அண்ணனை பழிவாங்க அவருடைய ஒரே. வாரிசை,காரை ஏற்றி தானே கொன்றது நினைவுக்கு வந்து போனது..தன்னையறியாமல்.அழ ஆரம்பித்தார்.."

"ஏம்பா அழறீங்க.. உங்களோடு சேர்ந்து உண்மையும் ஜெயிச்சிடுச்சுப்பா.."

"எங்க அண்ணனோட உண்மையான குணத்துக்கு முன்னாடி நான் தோத்துட்டேண்டா.. முதல்ல,நீ போலீசுக்கு போன் பண்ணு..உண்மையை சொல்லி நான் சரணடஞ்சாகணும்!

"தன் தந்தையை இப்போது புரியாமல்,அதிர்ச்சியுடன் பார்த்தான் கண்ணன்!

## முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில்

# தமிழக சட்டசபையில் கருணாநிதி உருவப் படம்: ஜனாதிபதி திறந்துவைத்தார்

## தமிழ்நாட்டில் தனி முத்திரை பதித்தவர் என புகழாரம்

**சென்னை, ஆக.3**

**தமிழக சட்டசபையில் கருணாநிதி உருவப்படத்தை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.**

சென்னை மாகாணமாக முன்பு தமிழ்நாடு இருந்தபோது, முதன் முதலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை 1921ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த வகையில் தமிழக சட்டசபைக்கு இது நூற்றாண்டு விழாவாகும்.

இந்த விழாவுடன் தமிழக முதலமைச்சராக 5 முறையும், எம்.எல்.ஏ.வாக 13 முறையும் இருந்த மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவப்படம் திறப்பு விழாவையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கான கோலாகல விழா, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டசபை கூட்ட அரங்கத்தில் நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. விழாவுக்கு கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை தாங்கினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகித்தார். தலைமை விருந்தினராக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கலந்துகொண்டார்.

சரியாக மாலை 5.02 மணிக்கு விழா தொடங்கியது. சபாநாயகர் மு.அப்பாவு வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொன்னாடை, புத்தகம், நினைவு பரிசை வழங்கினார். தொடர்ந்து, கவர்னர் பன்வாரிலால் புரோகித்துக்கும் மு.க.ஸ்டாலின் சிறப்பு செய்தார். அதன் பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சபாநாயகர் மு.அப்பாவு பொன்னாடை, புத்தகம், நினைவு பரிசை வழங்கினார்.

### காலம் பொன் போன்றது

அதைத்தொடர்ந்து மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவப்படத்தை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார். வீட்டில் புத்தக அலமாரிக்கு முன்னால் யானை சிலையின் மீது வலது கையை வைத்தபடி, சிரித்து கொண்டிருப்பதுபோல் கருணாநிதியின் உருவப்படம் தத்ரூபமாக இருந்தது. அந்த படத்திற்கு கீழே, "காலம் பொன் போன்றது, கடமை கண்போன்றது!" என்ற பொன்மொழி எழுதப்பட்டிருந்தது.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார். அவரைத்தொடர்ந்து கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை உரை ஆற்றினார்.

இதைத்தொடர்ந்து ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இங்கு யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்த சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் முற்போக்கு சிந்தனையை எடுத்துக்காட்டுகின்ற வகையில், மிகச்சிறந்த தமிழ்க்கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் ஒரு சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். "மந்திரம் கற்போம், வினைத்தந்திரம் கற்போம், வானை அளப்போம், கடல் மீனை யளப்போம், சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம், சந்தி, தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்".

இதை இவ்வாறு விளக்கலாம். வேதம், அறிவியல் இரண்டையும் கற்றுக்கொள்வோம். நாம் வானத்தையும், பெருங்கடல்களையும் ஆராய்வோம். நிலவின் இயல்புகள் என்னவென்று நாம் தெரிந்துகொள்வோம். நமது தெருக்களைத் தூய்மையாக்குவது குறித்தும் அறிந்து கொள்வோம்.

மண்ணின் மிகச்சிறந்த தலைமைகளை சட்டமன்றத்தில் கவுரவிக்கும் பாரம்பரியம் உள்ளது என்பதை அறிவது உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, சி.ராஜகோபாலாச்சாரி, சி.என்.அண்ணாதுரை, கே.காமராஜ், ஈ.வி.ராமசாமி, பி.ஆர்.அம்பேத்கர், முத்துராமலிங்கத் தேவர், முகமது இஸ்மாயில் சாஹிப், எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா, எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பி.சுப்பராயன் மற்றும் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் போன்ற பல தலைவர்களின் படங்கள் இப்பேரவையில் ஏற்கனவே உள்ளன.

### கருணாநிதி தனி முத்திரை

இப்போது இந்த புகழ்பெற்ற மண்டபத்தில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் மக்கள் நலனுக்காக அர்ப்பணித்த கருணாநிதியின் உருவப்படமும் இருக்கும். நான் இங்கு வந்தபோது, காந்தியடிகளின் மனசாட்சிக் காவலராக திகழ்ந்தவரும், சுதந்திர போராட்ட வீரர்களில் சிறந்த தலைவருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். ஜனாதிபதி மாளிகையில் முதலில் இடம்பெற்ற இந்தியர் அவர். அவருடைய வருகை இந்த மதிப்பிற்குரிய அரங்கினையும் அலங்கரித்தது. அவர் சென்னை மாநிலத்தின் முதல் பிரதமர் அல்லது முதல்வர் ஆவார். அவருக்கு பின் வந்தவர்களும், முன்மாதிரியாக திகழ்ந்த அரசியல் தலைவர்கள்.

இருப்பினும், ராஜாஜிக்கு பின் வந்தவர்களில், கருணாநிதி தான் நீண்ட காலம் ஆட்சி செய்தார். இதனால் தமிழ்நாட்டில் ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.

இந்தியா, விடுதலைக்காக போராடிக்கொண்டிருந்தபோது, 'கலைஞர்' தனது இளமைப் பருவத்திலேயே, தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் சமீபத்தில் தான் நம்மை விட்டுப்பிரிந்தார். உயர்ந்த லட்சியங்களுடன் கூடிய சிறுவனாக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏழை, எளிய மக்களுக்காக அவர் பணியாற்றத் தொடங்கியபோது, நீண்டகாலமாக வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியா, அன்னிய ஆட்சியாளர்களால் சுரண்டப்பட்டு வறுமையிலும், கல்வியறிவின்மையாலும் சிக்கலில் இருந்தது.

அவர் தமது இறுதி மூச்சின்போது, இந்த மண்ணும், இதன் மக்களும் அனைத்து துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் அடைந்துள்ளதாக திருப்தி அடைந்திருக்க வேண்டும். தமது நீண்ட கால, ஆக்கபூர்வமான வாழ்க்கையில் தாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் மாநில மக்களின் சேவைக்காகவும், தேசத்தின் சேவைக்காகவும் செலவிட்டோம் என்பதும் அவருக்கு திருப்தியளித்திருக்கும்.

### செம்மொழி

தமிழ் இலக்கியம் மற்றும் சினிமாவுக்கு அவர் அளித்த பங்களிப்புகள் பற்றி நான் என்ன சொல்ல முடியும்?. எனக்கு தெரிந்த விஷயம் என்னவென்றால், மொழி மீது ஆர்வம் கொண்ட அரசியல் தலைவர்கள் வெகு குறைவு. அவரைப் பொறுத்தவரை, அவரது தாய்மொழி வழிபாட்டுக்குரியது. தமிழ், நிச்சயமாக, மனிதகுலத்தின் மிகச்சிறந்த, மிகப் பழமையான மொழிகளுள் ஒன்றாகும். உலகம் முழுமையும் அதன் வளமான பாரம்பரியத்தில் பெருமை கொள்கிறது. ஆனால், அது செம்மொழியாக அதிகாரபூர்வ அங்கீகாரம் பெறுவதை உறுதி செய்தவர் கருணாநிதி.

கலைஞர் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தலைவராக திகழ்ந்தார். நமது தேசிய இயக்கத்தின் தலைவர்களுடன் நமக்கு இருந்த கடைசி இணைப்புகளில் அவரும் ஒருவர். விடுதலை பெற்று 75வது ஆண்டு நிறைவை நாடு கொண்டாடும்போது, இத்தகைய தலைவர்கள் குறித்தே எனது எண்ணங்கள் செல்கின்றன. .

அவர்கள் தாய்நாட்டின் மீது கொண்ட மதிப்பிலும், மரியாதையிலும் ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொருவரும் அவரவர் வழியில், இந்திய தாய்த்திரு நாட்டிற்கு சேவை செய்ய பாடுபட்டனர். ஒரு ஆற்றில் வெவ்வேறு கிளை நதிகள் ஒன்றிணைவது போல, அவர்கள் அனைவரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றிணைந்தனர்.

### இளைஞர்களுக்கு வேண்டுகோள்

நிகழ்காலத்தையும், எதிர்கால முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள, கடந்த காலத்துடன் தொடர்ந்து ஈடுபடுமாறு நான் இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதி மற்றும் பிறரின் வாழ்க்கையில், உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கான பதில்களைக் காண்பீர்கள். நமது சமீபத்திய வரலாற்றில் இளம் தலைமுறையினர் அதிக ஆர்வம் காட்டுவதை நான் காண்கிறேன். தெரிந்த மற்றும் தெரியாத விடுதலை போராட்ட வீரர்களுடன் தொடங்கிய பணிகள் தொடரும் என்ற நம்பிக்கையை அவர்கள் எனக்கு அளிக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் இந்தியா தனது ஞானத்தால் உலகிற்கு வழி காட்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதன் பின்னர் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி நன்றியுரை ஆற்றினார். மாலை 6 மணிக்கு விழா இனிதே நிறைவடைந்தது. விழாவில் சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், பல்வேறு கட்சி தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# ஏழை எளிய மக்களின் இதயங்களை வென்றவர் கருணாநிதி

## கவர்னர் புகழாரம்

**சென்னை, ஆக.3–**

**தமிழகத்தின் லட்சக்கணக்கான மக்களின், குறிப்பாக ஏழை–எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் இதயங்களை வென்றார் கருணாநிதி என்று கவர்னர் பன்வாரிலால் புரோகித் புகழாரம் சூட்டியுள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவப்பட திறப்பு விழா ஆகியவற்றுக்கு கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை தாங்கினார்.

விழாவில் பன்வாரிலால் புரோகித் பேசியதாவது:–

'கலைஞர்' என்றும் 'முத்தமிழ் அறிஞர்' என்றும் அழைக்கப்படும் கருணாநிதி தன்னுடைய பேச்சுத்திறமையால் மக்களை ஈர்த்தார். 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்ததும், தனது அரசியல் வாழ்க்கையில் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்க சாதனையாகும். அவர் தனது இளம் பருவமான 14வது வயதிலேயே அரசியலில் நுழைந்து, 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரையில் அவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிவாகை சூடினார். அவருடைய அரசியல் மதிநுட்பத்திற்காகவும், சீரிய சிந்தனைத் திறனுக்காகவும் இந்தியாவிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களால் அவர் போற்றப்படுகிறார்.

### எதிரிகளை வசப்படுத்தினார்

நிர்வாக பொருண்மைகளில் அவர் காட்டிய சுறுசுறுப்பும், அவரது அற்புதமான விவாதங்களும் இந்த சட்டமன்றத்தின் அவைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கருணாநிதியின் புகழுக்கு ஆதாரமாகவும், அவரது பெருமைக்கு காரணமாகவும் திகழ்ந்தது தமிழ் மொழியின் மீது அவருக்கு இருந்த அளப்பரிய திறமையேயாகும். இது அவரது அரசியல் எதிரிகளையும் கூட வசப்படுத்தியது.

கருணாநிதியின் அரசியல் நாகரிகத்தை ஒரு சம்பவத்தால் நன்கு உணர்த்த முடியும். 1972ம் ஆண்டில், ராஜாஜி உள்பட பல சுதந்திர போராட்ட வீரர்களின் சேவைகளுக்காகவும், சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றதற்காகவும் விருது பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ராஜாஜியால் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால் அப்போதைய முதலமைச்சரான கருணாநிதியிடம், அவர் சார்பாக அப்போதைய கவர்னரிடமிருந்து விருதை பெற்று தன்னிடம் அனுப்புமாறு வேண்டினார்.

2.10.1972 அன்று கருணாநிதி, ராஜாஜி சார்பில் விருதினைப் பெற்றுக்கொண்டு 3.10.1972 அன்று ராஜாஜியின் இல்லத்திற்கு சென்று, அவருக்கு மாலை அணிவித்து விருதினை வழங்கினார். இதை ராஜாஜி பெரிதும் பாராட்டினார். மாநிலத்தின் முதலமைச்சர் நேரில் சென்று விருதை வழங்கும் முறைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

### மக்களின் முதலமைச்சர்

கருணாநிதி தமிழகத்தின் லட்சக்கணக்கான மக்களின், குறிப்பாக ஏழை–எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் இதயங்களை வென்றார். அவர் 'மக்களின் முதலமைச்சர்' என அன்புடன் அழைக்கப்பட்டார். அவர் கொண்டு வந்த பல புதுமையான திட்டங்கள் ஏழை மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான அவரது எண்ணற்ற அர்ப்பணிப்பு சேவையினை பறைசாற்றுகிறது.

2 மாபெரும் தலைவர்களான பிரதமர் நரேந்திர மோடிக்கும், கருணாநிதிக்கும் இடையே 6.11.2017ம் நாளன்று நடைபெற்ற சந்திப்பை நான் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். நான் பிரதமருடன் சென்று கருணாநிதியை சந்தித்தேன். இது அருமையான சந்திப்பாக அமைந்தது. புதிதாக அமைக்கப்பட்ட 16வது சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கலாம். மேலும் மாறுபட்ட அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களாக இருக்கலாம். இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில், மக்களுக்கு சேவை செய்வதற்கும், மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்து பாடுபடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.





சட்டமன்ற நூற்றாண்டு விழா, கருணாநிதி படத்திறப்பு விழா

# முதலமைச்சராக மகிழ்கிறேன்; கருணாநிதியின் மகனாக நெகிழ்கிறேன்

## ஸ்டாலின் பேச்சு

**சென்னை, ஆக.3–**

**அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்த பல்வேறு சட்டங்களை இந்த அவை இயற்ற வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.**

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் திருவுருவப் படத் திறப்பு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:– நம்முடைய ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதாடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல், வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூகநீதியைத் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனைப் பெருமைகளுக்குரிய அவர், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

1919–ம் ஆண்டில் 'மாண்டேகு – செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு 1920–ம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

1921–ம் ஆண்டு கன்னாட் கோமகனால் முதல் மாகாண சுயாட்சி சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவளவிழா நிகழ்ச்சியும், அதேபோல 1935–ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் முதன்முதலாக 1937–ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைரவிழா நிகழ்ச்சியும், 1997–ம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

### மகளிருக்கு வாக்குரிமை

அதே வேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு சில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றிய பெருமை சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இடஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை கொண்டது.

அதுமட்டுமல்ல பேரறிஞர் அண்ணா சென்னை மாநிலத்திற்கு "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது; சுயமரியாதை மற்றும் சீர்திருத்த திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது; நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது; மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது; மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது; பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிட சட்டம் கண்டது; டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது; தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது என பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றிய பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு.

### இருமொழி கொள்கை

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில் "வாய்மையே வெல்லும்'' எனத் தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் கண்டு மகிழ்கிறோம் நாம். மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், ஏழை எளியவர் என விளிம்பு நிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக தனது ஜனநாயகக் கடமையை செம்மையாக நிறைவேற்றிய கருணாநிதியை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும்.

1957–ம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, தனது கன்னிப்பேச்சில் நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரை பதித்தவர் கருணாநிதி. முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராகப் பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் கருணாநிதி.

சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணைய அறிக்கையைச் செயல்படுத்த தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிட, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர்கல்வி பெறுவதில் இருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகர – சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கருணாநிதியை, அவரது 50 ஆண்டுகால சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான சோம்நாத் சாட்டர்ஜி, "கொள்கைகளுக்காகவும், லட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர் கருணாநிதி'' என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, கருணாநிதி இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

### காந்தக்குரல்

'உடன்பிறப்பே! உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது!

என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது! நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது!'

என்று தனது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தவர் கருணாநிதி.

அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது சர் பிட்டி தியாகராயர் டி.எம். நாயர் டாக்டர் நடேசனார் தொடங்கி இனமானப் பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன்.

முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

இந்தியாவின் முதல் குடிமகனான ஜனாதிபதி, தமிழன்னையின் தலைமகனான கருணாநிதியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன், கருணாநிதியின் மகனாக நெகிழ்கிறேன். இந்த வரலாற்று சிறப்புமிக்க சட்டசபைக்கு ஜனாதிபதி வருகை தந்து, இவ்விழாவை மேலும் சிறப்பானதாக்கியதற்கும், இவ்விழாவில் முன்னிலை வகித்த தமிழக கவர்னருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இவ்விழாவில் தமிழ்நாடு கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை வகித்து தலைமையுரை ஆற்றினார். பேரவைத் தலைவர் மு. அப்பாவு வரவேற்புரையாற்றினார். பேரவைத் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி நன்றியுரை ஆற்றினார். விழாவில் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ்சிப் பானர்ஜி, தலைமைச் செயலாளர் இறையன்பு, அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவுக்கே முன்னோடியாக திகழ்ந்தவர் கருணாநிதி: சபாநாயகர் அப்பாவு புகழாரம்

**சென்னை, ஆக.3**

**அனைவருக்குமான சட்டங்களை இயற்றி இந்தியாவுக்கே முன்னோடியாக திகழ்ந்தவர் கருணாநிதி என்று அவரது உருவப்பட திறப்பு விழாவில் சபாநாயகர் மு.அப்பாவு புகழாரம் சூட்டினார்.**

இது குறித்து வீல்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் ஸ்ரீவத்ஸ்ராம் கூறுகையில், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தின் அனைத்து பிரிவிலான வர்த்தகத்திலும், ஏற்றுமதிக்கான தேவை வலுவான நிலையில் இருந்தது. இதையடுத்து, நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் – ஜூன் காலகட்டத்தில் நிறுவனத்தின் வருவாய் ரூ.675.01 கோடியாக அதிகரித்தது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ரூ.212.03 கோடியாக மட்டுமே காணப்பட்டது என்றார்.

கடந்த நிதியாண்டில் ரூ.38.23 கோடி நிகர இழப்பை சந்தித்திருந்த நிலையில் 2021 ஜூன் காலாண்டில் நிறுவனம் ரூ.10.13 கோடி நிகர லாபத்தை பதிவு செய்துள்ளது.

மொத்த வருவாயில் ஏற்றுமதியின் பங்களிப்பு தற்போது 25 சதவீதமாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

# தாய்ப்பால் குடிக்க முடியாமல் நாக்கு அடிப்பாகம் இறுகிய குழந்தைகளுக்கு மேத்தா மருத்துவமனையில் நவீன சிகிச்சை

சென்னை ஆக.3–

மேத்தா மருத்துவமனை குழந்தைகள் மருத்துவ சிகிச்சைக்கு சிறப்பு பிரிவுகளை துவக்கி தலைசிறந்த மருத்துவமனையாக திகழ்கிறது. இது உலக தாய்ப்பால் வாரத்தையொட்டி பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் குடிக்க முடியாதபடி நாக்கு உள்ளே அடிப்பாகத்தில் இறுகி இருப்பதை சிகிச்சை அளித்து, தேவைப்பட்டால் ஆபரேஷன் செய்து அந்த குழந்தை தாய்ப்பால் குடிக்க சிகிச்சை வசதியை அறிமுகம் செய்துள்ளது.

பெரும்பாலும் குறைப்பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்த சிகிச்சை தேவைப்படுகிறது என்று மருத்துவமனை குழந்தைகள் நாக்கு சிகிச்சை பிரிவுக் குழு மருத்துவர்கள் வி.லட்சுமி, பாலமுருகன் ,ஜெயஸ்ரீ ஆகியோர் தெரிவித்தனர்.

குழந்தைகள் சிகிச்சை பிரிவு மருத்துவர்கள் திறமையாக செயல்பட்டு நவீன தொழில்நுட்பத்தில் ஆபரேஷன் செய்து இந்த குழந்தைகளுக்கு மீண்டும் தாய்ப்பால் கொடுக்க ஏற்பாடு செய்கின்றனர்.

இந்த நாக்கு அடிப்பாகம் இறுகி உள்ள குழந்தைகள் தாயின் மார்பகத்திலிருந்து பாலை சப்பி குடிக்க முடியாமல் கஷ்டப்படும். இதற்கு நாக்கின் அடியில் சிறிய ஆபரேஷன் செய்தால் அந்த குழந்தைகளால் மீண்டும் தாய்ப்பால் குடிக்க முடியும் என்று டாக்டர் வி. லட்சுமி தெரிவித்தார். பால் குடிக்கும்போது பால் வாய்க்குள் உள்ளே செல்லாமல் வெளியே கசிவதை வைத்து இந்தக் குறைப்பாட்டைக் கண்டுபிடிக்கலாம். அதேபோல பால் குடிக்கும்போது குழந்தைகள் அழுதால் இந்தப் பிரச்சனை இருக்கிறது என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த பிரச்சனைகளுக்கு சிகிச்சை பெற மேத்தா மருத்துவமனையை 739 777 6331 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

★ மெடிக்கல் லேப் டெக்னாலஜி ★ ஆப்டோமெட்டரி ★ மருத்துவமனை நிர்வாகம்

# + 2 தேசிய மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு தரும் சங்கரநேத்ராலயா அகாடமியின் மருத்துவ படிப்புகள்

## துணைத் தலைவர் டாக்டர் டி.எஸ். சுரேந்திரன் தகவல்

சென்னை, ஆக.3–

**+ 2 முடித்து விட்டு, ஒவ்வொருவரும் அடுத்து என்ன படிப்பது என்ற கேள்வியோடு பதிலுக்கு காத்திருக்கும்போது, தாராளமாக மருத்துவத்துறையை தேர்ந்தெடுக்கலாம்.**

சங்கரநேத்ராலயா வழங்கும் மருத்துவத் துறையில் உயர் கல்வி வாய்ப்புகள் பற்றி இதன் துணைத் தலைவர் டாக்டர் டி.எஸ். சுரேந்திரன் விவரித்தார்.

தி சங்கர நேத்ராலயா அகாடமியில் பிஎஸ்சி மெடிக்கல் லேப் டெக்னாலஜி படிப்பு வழங்குகிறது. இந்த படிப்பு தற்பொது தமிழ் நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், பல்வேறு மருத்துவ நிறுவனங்களுடன் இணைந்து வழங்குகிறது. சென்னை தி சங்கர நேத்ராலயா அகாடமியில் கடந்த 10 வருடங்களாக இந்த படிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகளில் லேப் டெக்னீஷியன்கள், ஆராய்ச்சியாளர்கள், பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் மருத்துவமனைகள் மற்றும் மருந்து கம்பெனிகளில் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிவியலாளர்களாக தங்கள் சேவையை செய்ய முடியும்.

**ஆய்வுக்கூட பரிசோதனை**

இது 4 வருட பட்டப்படிப்பு. முதல் 3 வருடங்கள் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூட பரிசோதனைகள் வகுப்புகளும், நான்காம் வருடம் முழுவதும் பிரபல மருத்துவமனைகளில் நேரடி பணி பயிற்சி (Internship) யும் வழங்கப்படுகிறது.

பிஎஸ்சி மெடிக்கல் லேப் டெக்னாலஜி படித்தவர்கள் எம்எஸ்சி மெடிக்கல் லேப் டெக்னாலஜி படிக்கலாம்,உயிரியலின் ஏனைய பிரிவுகளான, மைக்ரோபயாலஜி,



பையோ கெமிஸ்ட்ரி, மேல்குலர் பையாலஜி, பெத்தாலஜி போன்றவற்றில் பட்ட மேற்படிப்பும், மேலும் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆர்வமுள்ளவர்கள் டாக்டர் பட்டத்திற்க்கான ஆய்வு படிப்பும் மேற்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு drdeepa@snmail.org மற்றும் sreedevi@snmail.org என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

**மருத்துவமனை நிர்வாகம்**

சென்னை, தி சங்கர நேத்ராலயா அகாடமியில் 3 வருட பிபிஏ மருத்துவமனை மற்றும் மருத்துவமனை நிர்வாகம் படித்தவர்கள் மற்றும் 2 வருட எம்பிஏ மற்றும் எம்ஹெச் ஏ – படித்த பட்டதாரிகள், மருத்துவமனைகளில் பொதுமக்கள் தொடர்பு, ஹெல்த் இன்ஸ்யூரன்ஸ், மருத்துவமனைகளில் நிர்வாகம், கணக்கியல், வரவேற்பகங்கள், ஹவுஸ் கீப்பிங் நிர்வாகம், மார்க்கெட்டிங் போன்ற துறைகளில் பணியாற்றி வருகின்றனர்.

பிபிஏ – மருத்துவமனை மற்றும் மருத்துவமனை நிர்வாகம் படித்தவர்கள் எம்பிஏ மற்றும் தமிழ் நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப்பல்கலைக்கழகம் வழங்கும் எம்ஹெச்ஏ – மாஸ்டர் ஆப் ஹெல்த் கேர் அட்மினிஸ்ட்ரேஷன் போன்ற படிப்புகள் படிக்கலாம். இந்த படிப்புகள் படித்தவர்கள் மருத்துவமனைகள் மற்றும் தர மேம்பாட்டு மேலாண்மை துறைகளில் அனுபவங்கள் பெற்று சிறந்த வேலை வாய்ப்புகளை பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு senthilg@snmail.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

கண் மருத்துவத்துறையில் உடனடி மற்றும் நேரடி சேவை வாய்ப்புகளை வழங்கும் படிப்புகள் ஆப்டோமெட்ரி மற்றும் ஆப்டிக்கல் டிஸ்பென்ஸிங் எனலாம்.

ஆப்டோமெட்ரி – இளநிலை பட்டப்படிப்புகளாக – பல்கலைக்கழகங்கள், கண் மருத்துவ நிறுவனங்கள் – போன்ற அமைப்புகளின் மூலம் பயிற்றுவிக்கப்படுகின்றன. சென்னையில் சங்கர நேத்ராலயாவின் எலைட் ஆப்டோமெட்ரி கல்வி நிறுவனம் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக ஆப்டோமெட்ரியில் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி பட்ட வகுப்புகளையும் நடத்தி வருகிறது. மேலும் விவரங்களுக்கு http://www.eso.sankaranethralaya.org வலைத்தளத்தில் காணலாம். இந்த படிப்பு சாஸ்த்ரா பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படுகிறது.

தி சங்கர நேத்ராலயா அகாடமி, தி தமிழ் நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2 வருட பட்ட மேற்படிப்பு மாஸ்டர் ஆப் ஆப்டோமெட்ரி படிப்புகளை வழங்குகிறது.

சங்கர நேத்ராலயாவின் எலைட் ஸ்கூல் ஆப் ஆப்டோமெட்ரி தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகத்துடன் இணைந்து நான்கு வருட பேச்சிலர் ஆப் ஆப்டோமெட்ரி பட்டப்படிப்பினையும், இரண்டு வருட மாஸ்டர் ஆப் ஆப்டோமெட்ரி பட்ட மேற்படிப்பினையும் வழங்குகிறது.

ஆப்டோமெட்ரிஸ்ட் ஒவ்வொரு தனி நபர்களின் பார்வை திறனை பரிசோதித்து அதன் முடிவுகளை அலசி ஆராய்வது, கிட்டப்பார்வை தூரப்பார்வை வெள்ளெழுத்து உருளைப்பார்வை போன்ற பார்வை சார்ந்த குறைபாடுகளையும், கண் புரை, குளக்கோமா, நீரிழிவு விழித்திரை நோய் போன்ற நோய்களை கண்டறிவது (Diagnosis), கண்ணாடி, காண்டாக்ட் லென்ஸ், மற்றும் லோ விஷன் எய்டு உபகரணங்கள் போன்றவற்றை பரிந்துரைப்பது போன்றவைகளை செய்து வருகின்றனர்.

# சாலை விபத்தில் உயிரிழந்த மனோகரன் உடல் உறுப்புகள் தானம்: வடபழனி சிம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் உதவி

சென்னை, ஆக. 3–

சாலை விபத்தில் அடிபட்டு, உயிரிழந்த மனோகரனின் உடல் உறுப்புகள் தானம் கொடுப்பதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். இதற்கு வடபழனி சிம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் உதவினர்.

51 வயதான மனோகரன், தனது இரு சக்கர வாகனத்தில் பயணித்தபோது ஏற்பட்ட சாலை விபத்தில், அவருக்கு தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டன. அவரை விழுப்புரத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக, சென்னை வடபழனியில் உள்ள சிம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். சிம்ஸ் மருத்துவமனை வந்தவுடன், அவர் மூளை மற்றும் நரம்புகள் தொடர்பான தீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேல் சிகிச்சைகள் தொடர்ந்தன. உயிர்காக்கும் முயற்சியில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும், பெரிய அளவில் முன்னேற்றமும் இல்லாமல் இந்த தொடர் முயற்சிகள் தோல்வி கண்டன. மனோகரனின் மூளை செயல் இழந்து போனதால், அவர் மூளைச்சாவு அடைந்ததாக அறிவிக்க நேர்ந்தது. மனோகரனுக்கு கிரிஜா என்ற மனைவியும், ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

சிம்ஸ் மருத்துவமனையில் மனோகரனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து பேசிய இயக்குனர் டாக்டர் விஜயகுமார் சொக்கன் கூறுகையில், “எங்களது மருத்துவமனை தீவிர சிசிச்சைப் பிரிவின் மூத்த மருத்துவர்களும், நரம்பியல் நிபுணர்களும் ஆய்வு செய்து, மனோகரன் உடலில் இனி முன்னேற்றத்துக்கு வாய்ப்பில்லை எனவும், அவர் மூளைச்சாவு அடைந்துள்ளதாகவும் அறிவித்தனர். அதன்பிறகு, மனோகரனின் குடும்பத்தினர் தங்களுக்குள் கலந்தாலோசித்து, அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய விருப்பம் தெரிவித்தனர். இதன்மூலம் தற்போது சிகிச்சையில் உள்ள சில மனித உயிர்களை நிரந்தரமாக காப்பாற்ற முடியும் என்றால், ‘அதையே செய்யலாம்’ என்ற உன்னத முடிவுக்கு வந்தனர். இத்தகைய முடிவு எடுத்த அவரது குடும்ப உறுப்பினர்களின் தயாள குணத்திற்கு எங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” எனத் தெரிவித்தார்.

இதன்பின். தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்று, சிம்ஸ் மருத்துவமனையின் மூத்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் மனோகரனின் உடலில் இருந்து கல்லீரல், இடது சிறுநீரகம், இதயம், நுரையீரல், கருவிழிப்படலம் போன்ற பல உடல் உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலமாக வெளியே எடுத்துப் பெற்றுக் கொண்டனர். அவற்றில் கல்லீரல் மற்றும் சிறுநீரகம் சிம்ஸ் மருத்துவமனையிலேயே தேவையான நோயாளிகளுக்கு பொறுத்தப்பட்டன. இதயமும், நுரையீரலும் சென்னையில் உள்ள இதர மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தேவையானவர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.



# கொரோனா தடை; களிமண், காகிதக்கூழில் சிலை செய்பவர்கள் வாழ்வாதாரம் பாதிப்பு: நிவாரணம் வழங்க அரசுக்கு கோரிக்கை

காஞ்சீபுரம், ஆக.3 –

காஞ்சீபுரத்தில் களிமண், காகிதகூழில் விநாயகர் சிலைகளை செய்பவர்களின் வாழ்வாதாரம் கடந்த 2 ஆண்டுகளாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காஞ்சீபுரம் சிலைகள் தயாரிக்கும் குலாலர் நலச் சங்கத்தை சேர்ந்த தலைவர் கணேசன் நிருபர்களிடம் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

காஞ்சீபுரத்தில் ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பல்வேறு வடிவமைப்புகளில் விநாயகர் சிலைகள் விற்பனையாவது வழக்கம். ஆனால் கடந்த ஆண்டு கொரோனாவினால் காஞ்சீபுரம் தொழிலாளர்கள் மூலம் செய்த ஆயிரக்கணக்கான சிலைகள் விற்பனை செய்யாமல் வீணாகி போய்விட்டது. இந்த ஆண்டும் செய்துள்ள சிலைகள் விற்பனை ஆகாமல் கிடக்கிறது.

விநாயகர் சதுர்த்தி நெருங்கி கொண்டிருக்கும் வேளையில், விநாயகர் சிலைகளை நிறுவி வழிபடலாம் என தமிழக அரசு சார்பில் இதற்கான அறிவிப்பும் இன்னும் வெளியிடவில்லை. இந்த ஆண்டும் இதற்கான தடை நீடித்தால், எங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் என தொழிலாளர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர். தங்களுக்கு உரிய நிவாரணத்தையும் தமிழக அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கொரோனா தொற்று நோயாளிகளை செல்போன் மூலம் எந்நேரமும் கண்காணிக்க நவீன தொழில் நுட்பம் அறிமுகம்

சென்னை, ஆக.3–

**மருத்துவமனைகளை டிஜிட்டல் மயமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஹெல்த் சென்செய் நிறுவனம், சுகாதார பராமரிப்பு உள்ளிட்ட மருத்துவமனையின் முக்கிய பராமரிப்பு பிரிவுகள் மற்றும் வார்டுகளை வாரத்தில் எந்நேரமும் நேரலையில் கண்காணிக்க புதிய தொலை நிலை நோயாளி கண்காணிப்பு என்னும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது.**

இது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகள், தொடர்ச்சியான கண்காணிப்பில் இருக்க வேண்டிய நோயாளிகளை மருத்துவர்களும், ஆலோசனை நிபுணர்களும் தங்கள் ஸ்மார்ட்போன் மூலம் கண்காணிக்க உதவுகிறது.

‘ஹெல்த் சென்செய்’ ஐஐடி (சென்னை) சுய தொழில் மேம்பாட்டு பிரிவில் உருவானதாகும். துவக்க நிலையில் டாக்டர். மேத்தா மருத்துவ மனையில் பயன்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பிரபல மருத்துவ நிபுணர்களின் ஆலோசனை சேர்க்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த முறையை இந்தியாவில் உள்ள மருத்துவமனைகள் முழுவதும் செயல்படுத்தப்படுவதற்கு தேவையான நிதி உதவி பயோடெக்னாலஜி ஆராய்ச்சி உதவி கவுன்சில் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இது பயோடெக் ஷோகாஸ் இணையதளத்தில் ஹெல்த்கேர் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ளது. ஹெல்த் சென்செய் தயாரிப்பு பிரிவின் தலைமை அதிகாரி சபரிஷ் கூறுகையில், இது தற்போது தென்னிந்தியாவில் 8 மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை பிரிவில் 100–க்கும் மேற்பட்ட படுக்கைகளில் நேரலையில் உள்ளது. சோதனை முயற்சியாக இந்த முறையை பயன்படுத்த கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10–க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் ஒப்பந்தம் செய்துள்ளன. அவசர சிகிச்சை பிரிவு மற்றும் வார்டு போன்றவற்றை நேரடியாக சென்று கண்காணிப்பதை தொலைநிலை கண்காணிப்பு முறையானது வெகுவாக குறைக்கிறது.

டாக்டர் மேத்தா மருத்துவமனையின் தீவிர பராமரிப்பு மருத்துவ பிரிவு துணைத் தலைவர் டாக்டர். ராஜ்குமார் கூறுகையில், அவசர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகளை தொடர்ந்து கண்காணிப்பது என்பது மிகவும் சவாலானதாகும். தற்போது கொரோனா தொற்றானது அதை மேலும் சிக்கலாக்கி உள்ளது. இது மருத்துவ செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மருத்துவமனைகளில் டிஜிட்டல் தொழில்நுட்ப தீர்வுகளைப் பயன்படுத்துவதற்கும் வழி வகுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.


## PUBLIC NOTICE

My Client Mr.Aashish Jain son of Mr.Jithendra Kumar at NO/42 Narayana Mudali Street, Sowcarpet, Chennai 600 001 working at M/s. SCS DEVELOPERS, a Partnership firm, doing business at NEW NO.22, OLD NO.57, ORMES ROAD, KILPAUK, Chennai 600 010, represents that they have misplaced and lost the original documents from their custody namely (i) Sale Deed dated 21.11.1979 and registered as Document No.281 of 1980, the office of Sub Registrar Purasawalkam, in favour of Mr. Mathurdas Bhaichand Soni, (ii) Sale Deed dated 21.11.1979 and registered as Document No.285 of 1980, the office of Sub Registrar Purasawalkam, in favour of Kirit Shah, (iii) Sale Deed dated 10.11.1980 and registered as Document No.448 of 1980, the office of Sub Registrar Purasawalkam, in favour of Kusumben B bhat, (iv) Sale Deed dated 10.11.1980 and registered as Document No.290 of 1980, the office of Sub Registrar Purasawalkam, in favour of Sukanya Gokul Das and (v) Sale Deed dated 22.07.1976 and registered as Document No.1955 of 1976, the office of Sub Registrar Thuraiyur, in favour of Kunju Pillai, On 02.08.2021, while travelling in train from Beach Railway Station to Royapuram Railway Station. If any one having the said original documents or having any claim over the same may contact within Seven Days of this publication to the following address.

**A.Mohmmed Arif, Advocate**
**No.73, Appu Maistry Street,**
**Mannady, Chennai 600 001**

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திருமதி M.பமீலா முருகன், க/பெ. A.S.முருகன், வயது 72, எண்.24/62, சிவலிங்கம் தெரு, வெற்றி நகர், சென்னை-600082 என்ற விலாசத்தில் வசித்து வரும் என் கட்சிக் காரருக்காக இதன் மூலம் அறிவிக்கும் அறிவிப்பு என்னவென்றால், சர்வே எண்.513/3, 77 செண்ட் விஸ்தீரணம், மேல் அம்பாசமுத்திரம் கிராமம், அம்பா சமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளடங்கிய சொத்தை திரு. G.P.சுந்தரராஜன் என்பவரிடம் இருந்து திருநெல்வேலி மாவட்ட அம்பா சமுத்திரம் சார் பதிவகத்தில் ஆவண எண்.134/1995 ஆக பதிவு செய்யப்பட்ட 02.03.1995 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்று கிரையம் பெற்ற அன்று முதல் என்னுடைய கட்சிக்காரர் சொந்த சொத்தாக ஆண்டு அனுபவித்து வருகின்றார்.

மேற்சொன்ன கிரைய பத்திரம் 21.07.2021 அன்று காலை சுமார் 10 மணியளவில் சென்னை-600104, உயர்நீதிமன்றம் வளாகம், ஆவின் பால் பார்லர் அருகில் NSC போஸ் ரோடில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற பொழுது தவறிவிட்டது. அவர் அந்த கிரைய பத்திரத்தை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை.

மேற்படி கிரைய பத்திர ஆவணத்தை யாராவது எடுத்து வைத்திருந்தால் அதனை என்னிடமோ அல்லது என் கட்சிக்காரரிடமோ ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**R.V.VENKATESAN**
**ADVOCATE**
138, LAW CHAMBERS, HIGH COURT BUILDINGS, CHENNAI – 600 104
MOB: 99622 54601

## ஐபி ரிங்ஸ் லிட்.

(அமால்கமேஷன் குழுவின் ஓர் அங்கம்)
**பதிவு அலுவலகம் :** D-11/12, தொழிற்பேட்டை, மறைமலை நகர் - 603 209.
போன் : 044 - 2745 2816. பதிவு செய்யப்பட்ட இமெயில் : iprmmn@iprings.com இணையதளம் : www.iprings.com
CIN : L28920TN1991PLC020232

**30 ஜூன் 2021ல் நிறைவுற்ற காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை அறிக்கை**

(ரூ. லட்சங்களில்)

| வ. எண். | விவரங்கள் | காலாண்டு முடிய | | | ஆண்டு முடிய |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2021 (தணிக்கையாகாதது) | 31.03.2021 (குறிப்பு 5-ஐ பார்க்கவும்) | 30.06.2020 (தணிக்கையாகாதது) | 31.03.2021 (தணிக்கையானது) |
| 1 | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 6,283.48 | 7,639.01 | 1,014.33 | 19,646.01 |
| 2 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்) | 566.40 | 547.77 | (712.23) | 654.01 |
| 3 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | 566.40 | 547.77 | (712.23) | 654.01 |
| 4 | நிகர லாபம்/(நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு பின் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | 404.53 | 408.65 | (514.09) | 496.81 |
| 5 | மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் (இக்காலத்திற்கான லாபம்/(நஷ்டம்)(வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது) | 390.82 | 362.80 | (517.46) | 434.22 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,267.59 | 1267.59 | 1,267.59 | 1,267.59 |
| 7 | பிற சமபங்கு | | | | 9,271.71 |
| 8 | பங்கொன்றுக்கு ஈட்டிய வருமானம் (ரூ.10/- ஒன்றுக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்காக) | | | | |
| | அ) அடிப்படை | 3.19 | 3.22 | (4.06) | 3.92 |
| | ஆ) குறைமதிப்பீடு | 3.19 | 3.22 | (4.06) | 3.92 |

**குறிப்புகள் :**

1. மேற்படி தணிக்கையாகாத முடிவுகள் தணிக்கைக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு, ஆகஸ்டு 2, 2021 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2021-ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவலானது மார்ச் 31, 2021 ஆண்டு முடிய தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்ட சாரம் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013-ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயத்திற்கு (INDAS) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, தலைமை செயல்பாட்டு முடிவு செய்பவராக இருப்பதால் ('CODM'), உள் வணிக அறிக்கை முறையை அடிப்படையாக கொண்டு, நிறுவனத்திற்கு ஒரே ஒரு பிரிவு மட்டுமே என்பதை அடையாளம் கண்டுள்ளது, அதாவது ஆட்டோ உபகரணங்கள்-பிஸ்டன் ரிங்ஸ், வேறுபாட்டுநுட்ப கியர்கள், போல் வீல் மற்றும் பிற டிரான்ஸ்மிஷன் பாகங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையாகும். அதன்படி, Ind AS 108-ன் (நடவடிக்கை பிரிவுகள்) இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. உலக அளவிலும் மற்றும் இந்தியாவிலும் பரவியுள்ள கொரோனா வைரஸ் (Covid-19) பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிட்டத்தக்க அளவில் இடையூறையும், மந்த நிலையையும் ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய சூழ்நிலையில், கணக்கியல் தீர்வுகள் மற்றும் மதிப்பீடுகளை முடிப்பதில் நிறுவனம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது, அதாவது பெறத்தக்கவைகளை மீட்டெடுப்பது, சொத்துக்கள் மற்றும் சரக்குகளின் குறைபாட்டை மதீப்பீடு செய்தவது தொடர்பாக, இந்த நிதிமுடிவுகளின் ஒப்புதல் தேதி வரையிலான உள் மற்றும் வெளித்தகவல்களை கருத்தில் கொண்டு மற்றும் சொத்துக்களுக்கான தொகையை மீட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிலும் உலக அளவிலும் COVID-19 தொற்றுநோய் பெருகிக்கொண்டே இருப்பதால், அதன் உண்மையான தாக்கம் மதிப்பீட்டில் வேறுபாடுகளை ஏற்படுத்தக்கூடும். நிறுவனம் தொற்ற நோய்களின் பொருளாதார விளைவுகளை தொடர்ந்து கண்காணித்து தேவைப்படும்போது தகுந்த நடவடிக்கைகளை எடுக்கிறது.
4. 2021 நிதியாண்டுக்கான ஈவுத்தொகையாக ரூ.1.50 சமபங்கு ஒன்றுக்கு (தலா ரூ.10/- முகமதிப்பு கொண்ட சமபங்கிற்கு) என இயக்குனர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அதை ஜூலை 29, 2021 அன்று நடைபெற்ற நிறுவனத்தில் ஆண்டு பொது கூட்டத்தில் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
5. மார்ச் 31, 2021ல் முடிவடைந்த காலாண்டின் இலக்கங்கள் முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும், டிசம்பர் 31, 2020ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன் செய்யப்பட்ட இலக்கங்களாகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
6. முந்தைய கால இலக்கங்கள் இக்காலகட்டத்தோடு உறுதி செய்யும் வகையில் தேவைப்படும் இடத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டு உள்ளன.

**ஐபி ரிங்ஸ் லிட்.-காக**
**A. வெங்கடரமணி**
**நிர்வாக இயக்குனர்**

இடம் : சென்னை
தேதி : 02.08.2021

## INDO TECH

**இண்டோ-டெக் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட்**

CIN: L29113TN1992PLC022011

பதிவு அலுவலகம்: சர்வே எண். 153-210. இலுப்பப்பட்டு கிராமம், ராஜகுளம் அருகில், காஞ்சிபுரம் (மா). தமிழ்நாடு - 631561. தொ.பே: +91 44 30289854
மின்னஞ்சல்: investor@indo-tech.com | வலைதளம்: www.indo-tech.com

**நிறுவனத்தின் 29வது வருடாந்திர பொதுக்குழு கூட்ட அறிவிப்பு**

வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தை கூட்டுவதற்காக அனுப்பப்படும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக 2021 செப்டம்பர் 08ம் தேதி புதன்கிழமையன்று காலை 10:30 மணிக்கு (இந்திய ஸ்டாண்டர்ட் நேரம்) நிறுவனத்தின் 29வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM), வீடியோ கான்ஃபரன்சிங் ("VC") / பிற ஒலி ஒளி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடத்தப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோவிட்-19 பெருந்தொற்று சூழலினால் ஒரு பொது அமைவிடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல் வீடியோ கான்ஃபரன்சிங் ("VC") / பிற ஒலி ஒளி வழிமுறைகள் ("OAVM") வழியாக வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தை ("AGM" / "கூட்டம்") நடத்துவதற்கு கார்ப்பரேட் விவகாரங்களுக்கான அமைச்சகம் ("MCA") 2021 ஜனவரி 15 தேதியிடப்பட்ட அதன் சுற்றுமடலுடன், 2020 ஏப்ரல் 8, 2020 ஏப்ரல் 13, 2020 மே 5, 2020 மே 12 மற்றும் 2021 ஜனவரி 15 தேதியிடப்பட்ட சுற்று மடல்கள் வழியாக (ஒட்டுமொத்தமாக "MCA சுற்றுமடல்கள்" என குறிப்பிடப்படுவது) அனுமதியளித்திருக்கிறது மற்றும் வருடாந்திர அறிக்கையின் தாள் வடிவிலான நகல்களில் பங்குதாரர்களுக்கு அனுப்புவது குறித்து ஒரு தளர்வையும் அது வழங்கியிருக்கிறது. இந்த MCA சுற்றுமடல்கள், 2013-ம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் தொடர்புடைய சரத்துகள் மற்றும் 2015-ம் ஆண்டின் செபி (பட்டியலிடல் கடப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்) ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமானதாக நிறுவனத்தின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM), VC / OAVM வழிமுறையில் நடத்தப்படுகிறது. இந்த வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நடைபெறும் அமைவிடமானது நிறுவனத்தின் பதிவு அலுவலகமாக இருக்கும்.

நிறுவனத்தில் / சேமிப்பகங்களில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திருக்கிற உறுப்பினர்களுக்கு மட்டும் மின்னணுவியல் வழிமுறையில் மட்டுமே 2020-21 வருடாந்திர அறிக்கையோடு சேர்த்து AGMக்கான அறிவிப்பும் சேர்த்து அனுப்பப்படும். இந்த அறிவிப்பு மற்றும் 2020-21 வருடாந்திர அறிக்கை ஆகியவை, நிறுவனத்தின் வலைதளம்: www.indo-tech.com, பிஎஸ்ஈ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இந்தியா லிமிடெட் பங்கு சந்தைகளின் வலைதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் மற்றும் லிங்க் இன்டைம் இந்தியா பி. லிமிடெட்-ன் வலைதளமான instavote.linkintime.co.in-லும் கிடைக்குமாறு செய்யப்படும். வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் VC/OAVM வசதி வழியாக மட்டுமே உறுப்பினர்கள் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம்.

இதுவரை தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திராத உறுப்பினர்கள், தங்களது சேமிப்பக பங்கேற்பாளர்கள் ("DP") வழியாக பருப்பொருள் தன்மை நீக்கப்பட்ட வடிவில் வைக்கப்பட்டிருக்கும் பங்குகள் குறித்து, அவற்றை பதிவுசெய்யுமாறும் மற்றும் பருப்பொருள் வடிவில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை பதிவாளர் மற்றும் பங்கு மாற்றுகை முகவரான ("RTA") லிங்க் இன்டைம் இந்தியா பி. லிமிடெட்-க்கு அவர்களது மின்னஞ்சல் முகவரியான enotices@linkintime.co.in என்பதற்கு மின்னஞ்சலை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொலைதூர மின்-வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தின்போது மின்-வாக்களிப்பு ஆகிய இரு மின்னணுவியல் வழிமுறைகள் மூலம் உறுப்பினர்கள் தங்களது வாக்களிப்பதற்கான உரிமையை செயல்படுத்துவதற்கு நிறுவனம் வசதியினை வழங்கும். உறுப்பினர்கள் பருப்பொருள் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் வழிமுறை உட்பட அல்லது தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திராத உறுப்பினர்கள் அவர்களது வாக்குகளை மின்-வாக்களிப்பு முறை வழியாக செய்வது உட்பட மின்-வாக்களிப்பு செயல்முறை மீதான விரிவான அறிவுறுத்தல்கள், 29வது வருடாந்திர பொதுக்குழு கூட்ட அறிவிப்பின் ஒரு பகுதியாக வழங்கப்படும்.

இயக்குநர்கள் குழுவின் ஆணையின்படி
**இண்டோ-டெக் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட்-க்காக**
ஒப்பம்/-
சத்தியமூர்த்தி A
நிறுவன செயலாளர்

தேதி: 02 ஆகஸ்ட். 2021
இடம்: காஞ்சிபுரம்

## ஸ்ரீ நாச்சம்மை காட்டன் மில்ஸ். லிமிடெட்

GROW WITH VALUES

பதிவு அலுவலகம்:கதவு எண்: 181 "வசந்தம்"
4-வது குறுக்கு தெரு நியூ.:பேர்லேண்ட்ஸ்
சேலம் - 636 016.
CIN No: L17115TZ1980PLC000916
Phone No. 0427-2330847
e-mail: sncm @rediffmail.com Website: www.sncmindia.com

**அறிவிப்பு**

**கம்பெனியின் 54 வது இயக்குனர் குழுவின் கூட்டம் 30.06.2021-வுடன் முடிவடையும் தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளை பரிசீலித்து பதிவுக்கு ஏற்றுக்கொள்வதற்காக 12.08.2021 வியாழக்கிழமையன்று காலை 11.30 மணிக்கு கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் காணொளிக்காட்சி மூலம் நடைபெற உள்ளது அறிவிக்கப்படுகிறது.**

இயக்குனர் குழவின் ஆணைப்படி
Sd/-
பி.பழனியப்பன்
நிர்வாக இயக்குனர்
DIN No. 01577805

சேலம்
02.08.2021

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் முந்தைய காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், முந்தைய செங்கல்பட்டு தாலுக்கா, தற்போது திருப்போரூர் தாலுக்கா, நாவலூர் கிராமத்தில், புல எண் 82 – ல் அடங்கிய 51 சென்ட் மற்றும் பழைய புல எண் 83/1, தற்போதைய புல எண். 83/1A – ல் அடங்கிய 52.5 சென்ட், ஆக மொத்தம் 1 ஏக்கர் 03.5 சென்ட் உள்ள காலி நிலத்தினை அதன் உரிமையாளர்கள் திருமதி.மரியம் சபினா, திரு.சதக் இஸ்மாயில் பவுத், திருமதி.சமகா பாத்திமா இஸ்மாயில், திருமதி.சல்மா ரஜிஹா, திருமதி.சமகா கதீஜா ரஹ்மா, திருமதி.உமாமா கதூன், திரு.மீரான் ஹாரூன் மற்றும் திரு.முகமது அஷ்ரப் அவர்களிடமிருந்து கிரையம் பெற விழைந்துள்ளார். மேற்கூறிய சொத்தில் யாருக்கேனும் உரிமை இருந்தாலோ அல்லது இக்கிரையத்தில் யாருக்கேனும் ஆட்சேபம் இருந்தாலோ இன்றைய தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் கீழ்காணும் விலாசத்தில் எழுத்து மூலமாக தெரிவிக்கவேண்டும். அப்படி தவறும் பட்சத்தில் இச்சொத்து மற்றும் அதன் கிரையம் தொடர்பாக யாரும் உரிமையோ அல்லது ஆட்சேபனையோ தெரிவிக்க இடமில்லை என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**V.பரிமளம், வழக்கறிஞர்**
எண்.54/105, ராமசாமி தெரு, மண்ணடி,சென்னை – 600 001.
தொலைபேசி எண். 044–24352535.



நீலகிரி மாவட்டத்திற்கு புறப்பட்ட ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை, சென்னை விமான நிலையத்தில், வழியனுப்பி வைத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு, ஜனாதிபதி புத்தகங்களை வழங்கினார். கவர்னர் பன்வாரிலால் புரோகித், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு ஆகியோர் உடன் உள்ளனர்.

# 4 நாள் பயணமாக ஊட்டி வந்தார் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்

நீலகிரி, ஜூலை 3–

**ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இன்று ஊட்டி வந்தார். சென்னையிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதியை முதல்வர் ஸ்டாலின் வழியனுப்பி வைத்தார்.**

ஜனாதிபதி வருகையை ஒட்டி கோவை, நீலகிரியில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. மேலும் சூலூர் விமான படைத்தள பகுதியில் டிரோன்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

தமிழக சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி படத்திறப்பு விழா ஆகியவற்றில் கலந்துகொள்ள நேற்று மதியம் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சென்னை வந்தார். நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் நீலகிரி மாவட்டத்துக்கு புறப்பட்டார்.

சென்னை விமான நிலையத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழியனுப்பி வைத்தார். அப்போது முதலமைச்சருக்கு ஜனாதிபதி புத்தகங்களை வழங்கினார். கவர்னர் பன்வாரிலால் புரோகித், தலைமை செயலாளர் இறையன்பு ஆகியோர் உடனிருந்தனர். சென்னையிலிருந்து கோவையில் உள்ள சூலூர் விமானப்படைத்தளத்திற்கு ஜனாதிபதி வந்தார். பின்னர் அங்கிருந்து காலை 11.40 மணிக்கு ஊட்டிக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டு, ஊட்டி ஹெலிகாப்டர் தளத்தில் மதியம் 12.15 மணிக்கு வந்து இறங்கினார்.

அங்கு ஜனாதிபதியை வனத்துறை அமைச்சர் ராமசந்திரன், தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கலெக்டர் இன்னசென்ட் திவ்யா ஆகியோர் வரவேற்றனர். தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் உடன் இருந்தார்.

பின்னர் சாலை வழியாக ஊட்டி ராஜ்பவனுக்கு சென்று தங்கினார். இதனை தொடர்ந்து குன்னூர் அருகே வெலிங்டன் ராணுவ பயிற்சி மையத்தில் ராணுவ அதிகாரிகளுடன் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நாளை (புதன்கிழமை) கலந்துரையாடுகிறார்.

5ந் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவை ஜனாதிபதி சுற்றி பார்க்கிறார். இயற்கை எழில் மிகுந்த தாவரவியல் பூங்காவை ஜனாதிபதி கண்டு ரசிப்பதற்காக கோவையில் இருந்து 2 பேட்டரி கார்கள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

6ந் தேதி கோவை வழியாக டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

ஜனாதிபதி வருகையையொட்டி ஊட்டியில் மேற்கு மண்டல போலீஸ் ஐ.ஜி. சுதாகர் மேற்பார்வையில் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. நீலகிரி மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து மொத்தம் 1,240 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வெடிகுண்டு சோதனை பிரிவு போலீசார் ராஜ்பவன், தாவரவியல் பூங்கா, ஜனாதிபதி செல்லும் இடங்களில் சோதனை நடத்தினர்.

ஜனாதிபதி வருகையையொட்டி கோவையை அடுத்த சூலூர் பகுதியிலும் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. மேலும் விமானப்படை தளத்தை சுற்றியும் மோப்பநாய்கள், வெடிகுண்டு நிபுணர்கள் மூலம் தொடர்ந்து பலத்த சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன் ராணுவ ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மூலம் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சூலூர் விமானப்படைத்தள பகுதியில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# பஸ்களில் ஆண்களிடம் அதிக கட்டணம் வசூல் இல்லை

## ஓ.பி.எஸ். குற்றச்சாட்டுக்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் பதில்

சென்னை, ஆக.3–

**ஆண்களுக்குப் பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கவில்லை என்று அமைச்சர் ராஜகண்ணப்பன் கூறியுள்ளார்.**

பெண்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படும் பேருந்துகளில், அந்த இழப்பை ஈடுசெய்யப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களிடம் குறைந்தபட்சக் கட்டணம் 5 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தி வசூலிக்கப்படுவதாக நேற்று அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம் சாட்டியிருந்தார். இதனை போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக, சென்னை, தலைமைச் செயலகத்தில் அமைச்சர் ராஜகண்ணப்பன் இன்று செய்தியாளர்களிடம் பேசியதாவது:–

"தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பொதுமக்கள் மத்தியில் நல்ல பெயர் இருக்கிறது. அதைக் கெடுப்பதற்காகத் தவறான தகவல்களை ஓ.பன்னீர்செல்வம் சொல்லி வருகிறார். அம்மாதிரி கட்டண உயர்வு எங்கும் இல்லை. எந்த மாநகராட்சியிலும் அப்படி வசூலிக்கப்படவில்லை.

போக்குவரத்துத் துறையில் 1 லட்சத்து 22 ஆயிரம் பேர் வேலை பார்க்கின்றனர். அப்படி ஏதாவது குறிப்பிட்டு புகார் கூறினால், எங்காவது தவறு நடந்தால், அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இதுவரை அப்படி கட்டண உயர்வு, கட்டணத்தில் மாற்றம் எதுவும் கிடையாது. ஏற்கெனவே இருக்கும் கட்டணத்தில்தான் பயணிகள் பயணிக்கின்றனர்.

### பெண்கள் பயணம் 60 சதவிகிதமாக உயர்வு

பெண்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணிப்பது, 40 சதவீதத்தில் இருந்து 60 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதுதான்உண்மையானநிலைமை. திருவள்ளுவர் படம் வைத்து பேருந்து அருமையாக ஓடுகிறது. எந்தவிதப் பிரச்சினையும் இல்லை.

போக்குவரத்துத் துறையில் முதல்வருக்கு உள்ள நல்ல பெயரை ஓ.பன்னீர்செல்வம் கெடுக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். தான் இருப்பதை அவ்வப்போது காட்டிக் கொள்வதற்காக ஓ.பன்னீர்செல்வம் அறிக்கை விடுக்கிறார். இப்போது விடப்பட்டிருக்கும் அறிக்கை தவறானது.

### சஸ்பெண்ட்

குறிப்பிட்ட இடத்தில் தவறு நடந்திருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். விழுப்புரத்தில் ஒரேயொரு இடத்தில் நடத்துநர் தவறு செய்திருப்பதால் அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். ஒட்டுமொத்தமாகவே தவறு நடப்பதாகச் சொல்வது தவறானது. அந்தத் தவறைப் பொதுமக்கள் சுட்டிக்காட்டினால் கூட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதைத்தான் முதல்வர் சொல்லியிருக்கிறார், அதுதான் நடக்கிறது.

### கட்டண உயர்வு இல்லை

கட்டணம் உயர்த்தப்படும் என்ற பேச்சே இல்லை. ஏற்கெனவே விதிக்கப்பட்ட கட்டணம்தான் உள்ளது. எவ்வளவு நஷ்டம் வந்தாலும் அதனை அரசு ஏற்றுக்கொள்கிறது. மகளிருக்கு இலவசப் பயணத்துக்காக அரசு 1,200 கோடி ரூபாய் கொடுத்தது. இப்போது, ரூ.1,358 கோடி வந்திருக்கிறது. அதுசம்பந்தமாக முதல்வரிடம் பேசியிருக்கிறேன். அது அரசாங்கத்தின் பொறுப்பு. எவ்விதக் கட்டண உயர்வும் இல்லை. கட்டண மாற்றமும் இல்லை. எந்த மாநகராட்சியிலும் மாற்றம் இல்லை.

நேற்று வரை 47,846 திருநங்கைகளும் 4 லட்சத்து 43 ஆயிரத்து 163 மாற்றுத்திறனாளிகளும், அவர்களின் உதவியாளர்கள் 36 ஆயிரத்து 51 பேரும் இலவசமாகப் பயணித்துள்ளனர்.

விரைவில் மின்சாரப் பேருந்துகள் வாங்குவோம். தமிழகத்தில் கோவிட் பாதிப்பு குறைந்திருக்கிறது. பேருந்துகளில் ஏற்கெனவே உள்ள கட்டுப்பாடுகள் அமலில் உள்ளன".

இவ்வாறு அமைச்சர் ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

# சீனாவின் வூஹான் ஆய்வுக்கூடத்திலிருந்து தான் 'உயிர்க்கொல்லி' கொரோனா வைரஸ் பரவியது

## அமெரிக்கா மீண்டும் குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஆக.3–

**சீனாவின் வூஹான் ஆய்வகத்திலிருந்துதான் 'உயிர்க்கொல்லி' கொரோனா வைரஸ் பரவியதாக அமெரிக்கா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.**

அமெரிக்க குடியரசுக் கட்சி இது தொடர்பான அறிக்கையை நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், "சீனாவின் வூஹான் மாகாணத்திலிருந்துதான் கொரோனா வைரஸ் வெளியாகி இருப்பதை எங்களுக்குக் கிடைத்த தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. 2019, செப்டம்பர் 12க்கு முன்பே கொரோனா வைரஸ் சீனா ஆய்வகத்திலிருந்து வெளியாகி இருக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் உலக சுகாதார அமைப்பின் ஆய்வுக் குழுவினர் சென்று ஆய்வு நடத்த வேண்டும், கொரோனா வைரஸ் எங்கிருந்து பரவியது, அதன் மூலாதாரம் என்ன, ஆய்வகங்களில் இருந்து பரவியதா என்பது குறித்து ஆய்வு நடத்த வேண்டும் என அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்தன.

இதையடுத்து உலக சுகாதார அமைப்பு, சீனாவில் ஆய்வு செய்ய முடிவு செய்தது. ஆனால், சீனாவில் ஆய்வு செய்ய அந்நாட்டு அரசு தொடக்கத்தில் மறுத்துவிட்டது. பின்னர் உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினர் சீனா சென்று ஆய்வு நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில் சீனாவின் ஆய்வகத்திலிருந்து கொரோனா வைரஸ் பரவியதற்கான ஆதாரங்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அமெரிக்கா தொடர்ந்து சீனாதான் கொரோனா வைரஸைப் பரப்பியது என்று தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

### சீனா மறுப்பு

இந்தக் குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது. மிருகங்களிடமிருந்து தான் மனிதர்களுக்கு இந்த வரைஸ் பரவியது என்று கூறியுள்ளது.

இந்தக் கொரோனா முதலில் எப்படி – எங்கிருந்து பரவியது என்பது குறித்து புதிதாக விசாரணை நடத்தப்பட வேண்டும். அமெரிக்க அதிபர் பிடன் நிர்வாகம், செப்டம்பருக்குள் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று உலக அளவில் விஞ்ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# தமிழகம் முழுவதும் உள்ள 539 கோவில்களில் தூய்மைப் பணிகள்

சென்னை, ஆக.3

இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான தமிழகம் முழுவதும் உள்ள 539 கோவில்களில் தூய்மை பணிகள் (மாஸ் கிளினிங்) நேற்று தொடங்கி, இன்றும், நாளையும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுகுறித்து இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் கூறியதாவது:–

பிரசித்திபெற்றதிருக்கோவில்களான பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி கோவில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில், திருவேற்காடு கருமாரியம்மன் கோவில் உள்பட 539 கோவில்களில் உள்ள பிராகாரம், நந்தவனம், திருக்குளம், தண்ணீர் தொட்டி, மதில் சுவர், விமானங்களில் உள்ள செடிகள் அகற்றும் பணிகள், தரைதளம், மண்டபம், தூண்கள் தண்ணீர் பீச்சி அடித்து சுத்தம் செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும், பூஜை சமான்கள் சுத்தம் செய்தல் ஆகியவை மாஸ் கிளினிங் மூலம் கோவில்களில் ஒப்பந்த பணியாளர்கள், உழவாரப் பணியாளர்கள், கோவில் பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.

இவ்வாறு ஆணையர் ஜெ.குமரகுருபரன் கூறியுள்ளார்.



ராமேஸ்வர் ராமநாத சுவாமி கோவில் மற்றும் கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரா் கோவிலில் பக்தர்கள் தூய்மை பணியில் ஈடுபட்டனர்.



சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 216வது நினைவு நாளை முன்னிட்டு, அண்ணா தி.மு.க. சார்பில், கழக இணை ஒருங்கிணைப்பாளர், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தீரன் சின்னமலை மறைந்த இடமான, சேலம் மாவட்டம், சங்ககிரி மலைக்கோட்டையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கு மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, சங்ககிரி அருகே பள்ளிப்பாளையம் பிரிவு சாலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணி மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கு மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக சட்டமன்ற உறுப்பினர்களும், கழக நிர்வாகிகளும், தீரன் சின்னமலை திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# அந்தமான் நிக்கோபாரில் இன்று காலை 6.1 ரிக்டரில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

போரட்பிளேயர், ஆக. 3–

**அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இன்று காலை நடுத்தர மற்றும் சக்திவாய்ந்த இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.**

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இன்று காலையில் 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. என்சிஎஸ் படி, காலை 6:27 மணிக்கு போர்ட் பிளேயரில் ஏற்கனவே 4.3 ரிக்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மீண்டும் சக்தி வாய்ந்த இரண்டாவது நிலநடுக்கம் ஒரு மணி நேரம் கழித்து சுமார் 7.30 மணி அளவில் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இந்த இரண்டு நிலநடுக்கங்களால் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# 2 பி.எஸ்.எப். வீரர்கள் திரிபுராவில் படுகொலை

தலாய், ஆக.3–

**திரிபுராவில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 2 பி.எஸ்.எப். வீரர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களது ஆயுதங்களும் எடுத்து செல்லப்பட்டு உள்ளன.**

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான திரிபுராவில் என்.எல்.எப்.டி. என்ற தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் தலாய் மாவட்டத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த பி.எஸ்.எப். வீரர்கள் 2 பேர் என்.எல்.எப்.டி. அமைப்பினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டு உள்ளனர் என சந்தேகிக்கப்படுகிறது.

அவர்களில் ஒருவர் துணை ஆய்வாளர் ஆவார். இந்த தாக்குதல் சம்பவத்திற்கு பின்பு பயங்கரவாதிகள் பி.எஸ்.எப். வீரர்களின் இரண்டு ஆயுதங்களை எடுத்து கொண்டு தப்பி ஓடியுள்ளனர் என பி.எஸ்.எப். வட்டாரம் தெரிவித்துள்ளது.

# வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்ச்சி: நான் வாழ விரும்பவில்லை

## கார் விபத்தில் தோழி பலியானது குறித்து நடிகை யாஷிகா உருக்கம்

சென்னை, ஆக. 3–

**விபத்தில் தனது தோழி பலியானது குறித்து நடிகை யாஷிகா ஆனந்த் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் உருக்கமாக பதிவிட்டுள்ளார்.**

கடந்த மாதம் 25–ந்தேதி அதிகாலை நடிகை யாஷிகா ஆனந்த் அவரது நண்பர்களுடன் கிழக்கு கடற்கரை சாலையில், சூளேரிக்காடு என்ற இடத்தில் காரில் வந்துகொண்டிருந்தபோது விபத்தில் சிக்கினார். அதிவேகமாக கார் ஓட்டி வந்ததன் காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த விபத்தில் நடிகை யாஷிகாவின் தோழி வள்ளி செட்டி பவானி என்ற பெண் சம்பவ இடத்திலேயே பலியானார். நடிகை யாஷிகா பலத்த காயத்துடனும், அவரது இரண்டு ஆண் நண்பர்கள் லேசான காயத்துடனும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நடிகை யாஷிகாவின் உடலில் பல்வேறு இடங்களில் காயங்களும் எலும்பு முறிவுகளும் ஏற்பட்டிருப்பதால், அவருக்கு சில அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியிருப்பதாக அவரது தங்கை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நடிகை யாஷிகா ஆனந்த் முதன்முதலாக இந்த விபத்துக்கு குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மனம் திறந்துள்ளார்.

அந்தப் பதிவில் யாஷிகா கூறியிருப்பதாவது:–

"நான் வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்ச்சியுடன் வாழ நேரிட்டுள்ளது. என்னைக் காப்பாற்றியதற்காக கடவுளுக்கு நன்றி சொல்வதா? அல்லது என் தோழியை என்னிடம் இருந்து பறித்துக்கொண்டதற்காக கடவுளைப் பழிப்பதா? என்று தெரியவில்லை. நான் ஒவ்வொரு நொடியும் நீ இல்லாதது குறித்து வருத்தப்படுகிறேன் பவானி. நீ என்னை எப்பொழுதும் மன்னிக்க மாட்டாய் என எனக்குத் தெரியும். உன் ஆத்மா சாந்தி அடையட்டும். நீ என்னிடம் திரும்ப வர வேண்டும் என கடவுளிடம் வேண்டிக்கொண்டிருக்கிறேன். உன் குடும்பத்தார் என்னை மன்னிப்பார்கள் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

உன் மரணத்துக்கு நான் காரணமாக இருப்பேன் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. எனக்காக கடவுளிடம் வேண்டிக்கொண்டவர்களுக்கு நன்றி. நான் திரும்ப நலம் பெற்று வருவேன். நான் உண்மையில் வாழ விரும்பவில்லை. ஆனால் நீங்கள் வாழ்வதற்கான நம்பிக்கையை எனக்கு அளித்துள்ளீர்கள் என பதிவிட்டுள்ளார்.



# காஷ்மீர் என்கவுண்டரில் பாகிஸ்தான் பயங்கரவாதி பலி

ஜம்மு, ஆக.3–

காஷ்மீர் மாநிலத்தின் பந்திபோரா மாவட்டத்தில் சந்தாஜி பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் தகவலை அறிந்துகொண்டு பாதுகாப்புப் படை வீரர்கள் சோதனை நடத்தினர். இதில் அப்பகுதியில் பழைய கட்டடம் ஒன்றில் பதுங்கியிருந்த தீவிரவாதி, பாதுகாப்புப் படை தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்டார். இறந்த தீவிரவாதியைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. தீவிரவாதி வைத்திருந்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

ஜூலை 23, 24ந் தேதி ஷோக் பாபா வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடி வேட்டையில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்போது தப்பி ஓடியவனை தேடி வந்தார்கள். அவன் தான் சந்தாஜி பகுதியில் ஒளிந்திருப்பதாக வந்த தகவலை அடுத்து போலீசார் அந்தப் பகுதியை சோதனை நடத்தினர். அப்போது நடந்து என்கவுண்டரில் பாபர் அலி எனப்படும் இந்த பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்டான். இவன் பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் உகாடாவைச் சேர்ந்தவன்.




Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E–mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.